விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 15 வியாழக்கிழமை (31.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அமெரிக்க அறிக்கைகளுக்கு பொது பல சேனா அஞ்சாது

## பணி தொடரும் என்கிறார் அமைப்பின் செயலாளர்



**(கொழும்பு)**
**அமெரிக்காவின் அரசியல் தேவைகளை இலங்கைக்குள் நிறைவேற்றுவதற்கு பொது பல சேனா தடையாக இருப்பதன் காரணமாகவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் பொது பல சேனாவுக்கு எதிரான அறிக்கைகளை தொடர்ச்சியாக வெளியிடுகின்றதென குற்றஞ்சாட்டும் அதன் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர்,எ எவர் தடுத்தாலும் அமெரிக்கா எந்த அறிக்கைகளை வெளியிட்டாலும் பௌத்தத்தையும் நாட்டையும் பாதுகாக்கும் எமது வேலைத்திட்டம் தொடரும் என்று தெரிவித்தார்.**

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் பொது பல சேனா அமைப்பு உள்ளதாக அமெரிக்கா இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக தெளிவுபடுத்திய போதே கலகொட அத்தே ஞானசாரதேரர் இதனைத் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

### ஊடக வன்முறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் வட புலத்தில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் மிக மோசமான கட்டத்தினை அடைந்துள்ள நிலையினில் அதனை கண்டித்து ஊடக அமைப்புக்கள் இன்று வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளன.

யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று நண்பகல் 12மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும் இவ் ஆர்ப்பாட்டத்திற்கு சுதந்திர ஊடக

19 ஆம் பக்கம் பார்க்க....



பௌத்த தர்மத்திற்கு எதிராக நாட்டுக்குள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பௌத்த விவகார அமைச்சிடம் இராவணா சக்தி அமைப்பு 5 அம்ச கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை நேற்று புதன்கிழமை கையளித்தபோது...

### காணாமல் போன சிறுவன் மீட்பு

(வவுனியா)
வவுனியா பேருந்து நிலையத்தில் காணாமல்போன 8 வயதுச் சிறுவன் நேற்று யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளான்.

வவுனியா காரிக்குளத்தைச் சேர்ந்த பெர்ணான்டோ சாரங்கன் என்ற சிறுவனே காணாமல் போயிருந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் இளைஞன் ஒருவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## பேரறிவாளனின் விடுதலையை நரேந்திர மோடி உறுதி செய்வார்

### தாய் அற்புதம்மாள் நம்பிக்கை

(சென்னை)
இந்தியப் பிரதமர் மோடி தனது மகனின் விடுதலையை உறுதி செய்வார் என ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவிக்கும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

அற்புதம்மாள் தமிழகம் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள தனியார் கல்லூரி விழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த வேளை நிருபர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

எனது மகனின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அப்போது உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த சதாசிவம் உத்தரவிட்டார். பேரறிவாளனின் விடுதலையை மாநில அரசு முடிவு செய்யலாம் எனவும் உத்தரவிட்டார்.

இதையடுத்து தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா பேரறிவாளனை விடுதலை செய்யப்போவதாக அறிவித்து, மத்திய அரசிடம் இது பற்றி தெரிவித்திருந்தார்.

ஆனால் அப்போது ஆட்சியில்

20 ஆம் பக்கம் பார்க்க....

### ஒலிபெருக்கிகளுக்கு கட்டுப்பாடு விதிப்பு

(யாழ்ப்பாணம்)
ஆலயத்திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளின் போது ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் நாளை ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

ஒலிபெருக்கிகளின் பாவனையை ஒழுங்கு படுத்துவது தொடர்பாக நேற்று புதன்கிழமை வட மாகாண விவசாய அமைச்சில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ்துறை அதிகாரிகள் மற்றும் மதகுருமார்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு கைப்பேசி வேண்டாம்-பொலிஸ்

(யாழ்ப்பாணம்)
18 வயதுக்கு உட்பட்ட தங்களது பிள்ளைகளின் பாவனைக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்க வேண்டாம் என்று பெற்றோர்களிடம பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கொன்று யாழ்ப்பாணம், இடைக்காடு மகா வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் வழி காட்டலில், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வில் உரையாற்றிய காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் சிந்து பாமினி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அச்சுவேலிப் பொலிஸ் நிலையப பொறுப்பதிகாரி சமன் ஜே.ஏ.எஸ்.எம். கே.ஜெயசிங்க தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

18 வயதிற்குட்பட்ட பிள்ளைகள், பாடம் சம்பந்தமாக தொலைபேசியில் நண்பர்களுடன் உரையாடுவதாக இருந்தால், பெற்றோர்களும் அருகில் இருந்து அவர்கள் என்ன உரையாடுகின்றனர் என்பதை அவதானிக்க வேண்டும்.

தங்கள் பிள்ளைகள் தினமும்

19 ஆம் பக்கம் பார்க்க....

## கச்சதீவுக்குள் நுழைந்தால் கைது செய்யப்படுவீர்கள்!

### தமிழக மீனவர்களுக்கு கடற்படை எச்சரிக்கை

(கொழும்பு)
தமிழக மீனவர்கள் கச்சதீவுக்குள் நுழைந்தால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் கச்சதீவை சுற்றி கடற்படையினர் பாதுகாப்பு ப்ணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினர் கைது செய்த மீனவர்களை விடுதலை செய்யாது போனால், கச்சதீவில் குடியேற போவதாக தமிழக மீனவர்கள் அறிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும் தமிழக மீனவர்கள் இவ்வாறு அறிவித்திருப்பது இது முதல் முறையல்ல எனவும் இரண்டு முறை இவ்வாறு கூறியிருக்கின்றனர் எனவும் கடற்படை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சமூக நீதி தேவையில்லையா?

### சோபித தேரரிடம் மனோ கேள்வி

(கொழும்பு)
18-ம் திருத்தத்தை ஒழித்து, 17-ம் திருத்தத்தை மீளக்கொண்டு வருதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் ஆகியவை பற்றி மட்டும் பேசும் வண. மாதுளுவாவே சோபித தேரர், இலங்கை அரசியலமைப்பில் [illegible] ரளவிலாவது இருக்கின்ற 13-வது திருத்தத்தை மறந்தது ஏன்? நீங்கள் முன்னெடுக்கும் சமூகநீதி தமிழ், முஸ்லிம்மக்களுக்கு இல்லையா என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளரும், கோட்டே நாகவிகாரையின்விகாராதிபதியுமான வண. சோபித

19 ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

மிட்சுபிசி (ஜப்பான்) Full Body 650cc வான் (பெற்றோல்) விற்பனைக்கு உண்டு. இலகு லீசிங் கொடுப்பனவும் ஒழுங்கு செய்துதரப்படும்

தொடர்பு :
0776237956

(7180)

## தேவை

பான்சி கடைக்கு அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை (யாழ்.நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு : 0776237956

(7180)

## சாரதி தேவை

பண்ணை வேலைகளுடன் கூடிய சாரதி தேவை.

சம்பளம் 15000/-

தொடர்பு : SOND
இல. 60, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0776549303

(7172)


# பண்ணிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் வாரந்தோறும் சனி, ஞாயிறுக்கிழமைகளில் சைவாலயங்கள், சைவ நிறுவனங்கள் பாடசாலைகளிலும் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 3 மணியிலிருந்து 4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், பிற்பகல் 4.30 மணியிலிருந்து 6.15 மணிவரை யாழ்.சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்திலும், செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் 5 மணி தொடக்கம் 6.30 மணிவரை யாழ்.சிவதொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்திலும் இப்பயிற்சிகள் நடைபெற்று வருவதாகவும் இப்பயிற்சி வகுப்புக்களை தேவார இசைமணி கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் ஓதுவார் மூர்த்திகள் நடத்தி வருவதாகவும் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (செ)

# மாநகரசபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)


## British College of English

பிரித்தானிய ஆங்கிலக் கல்லூரி

IELTS [Highest pass rate in Jaffna]
General English
Spoken English
I-ESOL
Business English (with presentation skills)

IELTS Registration Centre | City & Guilds APPROVED CENTRE | British College Smart teachers ,bright tomorrow 0777302882

படிமுறை ரீதியில் அமைந்த கற்கை நெறிகள்.மாணவரின் நிலைக்கேற்ற கல்வி நெறியை தெரிவு செய்ய வசதி செய்கிறது. 16 வருட அனுபவமுள்ள முழு நேர இங்கிலாந்து பட்டதாரி ஆசிரியர்கள் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம். எமது மாணவர்களின் வெற்றிக்கதைகளை இணையத்தில் காணுங்கள் : http://edu.kugroup.info/

BCE@Knowledge Unvierse
No 626,1/1,K.K.S Road, Jaffna.021-3208342

(7176)


## உன் நினைவுகளுடன் ஏழு ஆண்டுகள்.....



சகாதேவன் நிலக்ஷன்

1985 - 2007

அம்மா டடா அண்ணா அண்ணி நிலாஷன்குட்டி

47 புகையிரத நிலயவீதி
கொக்குவில்

(7177)


## மாபெரும் இலவச இசை நிகழ்ச்சி

NDB bank

NDB வங்கி பெருமையுடன் வழங்கும்

## சுப்பர்சிங்கர் இசை நிகழ்ச்சி

திவாகர், சய்யத் சுபான், சாத் சந்தோஸ், பார்வதி, சோனியா, அரவிந் ஸ்ரீநிவாஸ் மற்றும் சிவானி




செல்லமுத்து விளையாட்டு மைதானம் மானிப்பாய்

02-08-2014
6:31pm

அனுமதி இலவசம்

VISIONARTS | Travel Partner | VARNAM FM 90.4 90.6 | SUNDHARSON | RAMCO SUPER GRADE | மஹபொல லொட்டோ | PENINSULA TRADING COMPANY (PVT) LTD NORTHERN PROVINCE AGENT FOR M LOTTO | வட மாகாண M Lotto முகவர் | SriLankan Airlines | Metro Travels | VARNAM TV

(7173)

## Peninsula Trading Company (Private) Limited

பெனின்சுலா றேடிங் கம்பனி (பிறைவேற்) லிமிட்டற்
வட மாகாண M Lotto முகவர்

- M4D – 0 தொடக்கம் 9 வரை 4 இலக்கங்களை தெரிவு செய்து 20/- பெறுமதியான ரிக்கட்டுக்களை வாங்கி 10000 ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Lotto -1 தொடக்கம் 68 வரை 4 இலக்கங்களை தெரிவு செய்து 20/- பெறுமதியான ரிக்கட்டுக்களை வாங்கி 4மில்லியன் ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Lotto Plus -1 தொடக்கம் 68 வரையான 5 இலக்கங்களை தெரிவு செய்து 50/- பெறுமதியான ரிக்கட்டுக்களை வாங்கி 5 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.
- M Super Lotto -1 தொடக்கம் 50 வரையான 6 இலக்கங்களை தெரிவுசெய்து 150/- பெறுமதியான ரிக்கட்டுக்களை வாங்கி 15 கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வெல்லலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உள்ளடங்கலாக வட மாகாணத்தின் எல்லா பகுதிகளுக்கும் எமது Lotto விற்பனை முகவர்கள் தேவை. விரும்புவோர் எமது யாழ்.முகவரை கீழ் உள்ள விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (7174)

இல. 120, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5333, 021 222 7733, 021 [illegible]


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மலிங்கம் வள்ளியம்மை



யாழ்.புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவை வதிவிடமாகவும், இல. 32, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் வள்ளியம்மை 2014.07.27 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் – தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா – சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, பூரணம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, அமரர் கருணாகரன், அமரர் தவனேஸ்வரி (முன்னாள் ஆசிரியர் யாழ். புங் குடுதீவு கணேசா மகா வித்தியாலயம்), கனகேஸ்வரி (கனடா), முன்னாள் ஆசி ரியர் கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் ஸ்ரீபன், அமரர் சாரதாதேவி, தயாபரன் (கனடா), தயாஜினி (கனடா) ஆகியோரின் மாமி யாரும், சுதன் – கஜா (பிரான்ஸ்), கஜானா, பிரசன்னா, டயானா, தர்சன், ஆரதி, ஆரூசன், ஷகீஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 31.07.2014 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 32, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 0772363537

தகவல் :
மகன் கிருபாகரன்
(கனடா)

(7178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், மாதகல் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 13 கிலோ கேரள கஞ்சாவை தாம் நேற்றுமுன்தினம் மாலை மீட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். கஞ்சாவை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்றுபேரையும் தாம் கைதுசெய்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் 2.5 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அந்த நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது. யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் கஞ்சா மறைத்துவைக்கப்பட்டுள்ள விடயம் தெரியவந்தது என்றும், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண் அபயவர்த்தன தலைமையிலான பொலிஸ் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து இளவாலை பொலிஸாரின் அனுமதியுடன் குறித்த வீட்டில் தேடுதல் நடத்தினர் என றும். இதன்போது 13 கிலோ கிராம் கேரள கஞ்சா மறைத்துவைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்த நிலையில் அவற்றை மீட்டதுடன் வீட்டில் இருந்த மூவரையும் தாம் கைது செய்தனர் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர.

கைதான மூவரும் வவுனியா பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (6-250)

# தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலே சாத்தியம்

## சோபித தேரர் தெரிவிப்பு

அனைவருமே எதிர்க்கும் அரசாங்க முறைமைக்கு எதிராக தனித்து போராடாது அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுமேயானால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை மாற்றியமைக்க முடியும். ஆட்சி முறைமையில் மாற்றம் ஏற்படுமாயின் தமிழர் பிரச்சினைக்கான தீர்வும் இலகுவில் எட்டப்படும் என தெரிவிக்கும் மாதுலுவாவே சோபித தேரர் ஜனாதிபதியே இதை செய்வாராயின் பொது வேட்பாளருக்கான தேவை இருக்காது எனவும் சுட்டிக் காட்டினார்.

மாதுலுவாவே சோபித தேரர் மற்றும் விவசாயிகள் சங்கத்தினர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று கோட்டை நாகவிகாரையில் இடம்பெற்றது. இதன் பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்குவது பற்றி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அனைத்து தரப்பினரும் இன்று நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்குவது தொடர்பில் போராடிக் கொண்டிருக்கின்றனர். இம்முறைமையினால் வெறுமனே அரசியலில் மட்டும் தாக்கம் செலுத்தாது விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் இது பாதிக்கின்றது. இவற்றினை பாதுகாக்க கட்சிகள் தனித்து போராடுவதில் எவ்வித பயனுமில்லை. அனைவரும் ஒரு கொள்கையின் கீழ் ஒன்றிணைய வேண்டும்.

தமிழர் பிரச்சினையொன்று உள்ளது. முஸ்லிம் மக்களுக்கு எதிரான முரண்பாடுகள் உருவாக்கப்படுகின்றது. இவை தொடர்பில் தனித்தனியே போராடுவது அர்த்தமற்றது. எனவே, அதிகாரப் பகிர்வு நோக்கி பொது நோக்கத்திற்காக போராடி அதில் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்துவோமாயின் தமிழர் பிரச்சினைகளுக்கு தானாகவே ஒரு தீர்வு எட்டப்பட்டு விடும்.

அதேபோல், தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேச அழுத்தமொன்றோ, தலையீடோ தேவையில்லை. இலங்கைக்குள்ளேயே தீர்வு நோக்கி பயணிக்க முடியும். இதை எமது அரசியல் தலைவர்களே செய்து முடிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு இலகுவில் எட்டக் கூடிய ஒன்றே. புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் இருக்கும் வரையில் தீர்வு கிடைப்பது நிச்சயமே.

வாயை மூடி அமைதியாக இருந்து உரிமைகளை வென்றெடுக்க முடியாது. போராடினால்தான் உரிமையினை பெறலாம் என்ற நிலைக்கு காலம் வந்து விட்டது. தவறுகளை ஒரு சில அரசியல் தலைவர்கள் செய் கின்றனர். ஆனால் தண்டனை பொது மக்களுக்கே கிடைக்கின்றது. இதை மாற்றியமைக்க வேண்டும்.

எனவே, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை அன்று எதிர்த்த அனைவரும் இன்று அரசாங்கத்திற்குள்ளேயே இருக்கின்றனர். அவர்கள் நினைக்க வேண்டும் மாற்றியமைப்பது தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதை செய்தால் பொது வேட்பாளர் தொடர்பில் பேச வேண்டிய தேவை ஏற்படாது. இப்போதும் ஜனாதிபதி மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, இதற்கான முடிவினை அவரே மேற்கொள்வது தான் நியாயமானது எனவும் அவர் தெரிவித்தார். (6)

# ஹெரோயின் எங்கே? அரசிடம் ஐ.தே.க கேள்வி

(கொழும்பு)

அண்மைக்காலமாக இலங்கையில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருட்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு என்ன நடக்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அவ்ற்றின் உண்மையான தொகையை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான முறையொன்று தேவை எனவும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அங்கு அவர் தொடாந்தும் உரையாற்றுகையில்,

அண்மைக்காலமாக ஹெரோயின் போதைப் பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டு வருவதாக சுங்கப்பிரிவினரும் பொலிஸாரும் தெரிவிக்கின்றனர். கைப்பற்றப்படும் தொகைக்கும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தொகைக்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே கைப்பற்றும் உண்மையான தொகை என்ன என்பது தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான முறையொன்று தேவையாகவுள்ளது.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போதைப் பொருட்கள் அதன் பின்னர் நீதிமன்ற பாதுகாப்பில் உள்ளதா அல்லது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளதா என்பது தெரியாது. இந்தநிலையில் பொலிஸ் மற்றும் சுங்கத்தினர் கைப்பற்றும் போதைப் பொருட்கள் மீண்டும் கடத்தல்காரர்களுக்கே செல்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த வருடத்தில் இலங்கையில் சுமார் ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார். (6)

# பிரித்தானிய பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம்

பிரித்தானியாவைச் சேர்ந்த 20 வயதுப் பெண்ணொருவர், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அம்பாறை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில், உல்லை அறுகம்பை பிரதேசத்திலேயே இந்த துஷ்பிரயோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடலில் பல காயங்களுடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.50 மணியளவில் பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த பிரித்தானியப் பெண், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இரவு 7.30 மணியளவில் அம்பாறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# குருதிக்கு தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய கலாநிதி கார்த்திக் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான குருதிப்பரிமாற்றம் காரணமாகவே இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குருதிக் கொடையாளிகள் இரத்த வங்கிக்கு சமூகம் தந்து இரத்ததானம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.(6-23)

## இன்றைய இராசி பலன்

31.07.2014
(ஆடி 15, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.51 மணிவரை
உத்தரம் பின்னிரவு 4.13 மணிவரை
இராகுகாலம் -1.33-3.03 மணிவரை
சுபநேரம் - 7.33-9.03 மணிவரை
கருட பஞ்சமி

வளவன்

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

**இடபம்:** மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுப செய்திகள் இல்லம் தேடி வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் கிடைக்கலாம், கற்பனை மிகுதியான நாள், தொழில் நன்மையுண்டு.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கு என நினைக்கவேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்க், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர்.

**மகரம்:** புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்கள் எளிதில் கைகூடும், அரைகுறையாக இருந்த பணிகளை எளிதில் செய்து முடிப்பீர்கள், கைவிட்டுப்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும்.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம்.

**மீனம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், நீண்ட நாளை ஆசையொன்று நிறைவேறும் நாள், சுப காரியப்பேச்சுக்கள் சுமுகமாக அமையும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர தீயணைப்பு பிரிவினருக்கு கொழும்பில் விசேட பயிற்சிகள்

யாழ்.மாநகர சபை தீயணைப்பு பிரிவினருக்கு கொழும்பில் தீயணைப்பு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தீயணைப்பு பிரிவினருக்கான பயிற்சிகள் அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.


யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு படைப்பிரிவில் உள்ள 18 பேருக்கு அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இவர்கள் 18 பேருக்குமே கொழும்பில் தீயணைப்பு தொடர்பிலான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கொழுந்து விட்டெரியும் தீயினை எவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல், தீயிற்குள் சிக்கியுள்ளவர்களை எவ்வாறு மீட்டல், தீயணைப்பு படைவீரர்கள் எவ்வாறு தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்தி சேவையில் ஈடுபடுதல், அடுக்குமாடி கட்டடங்களில் எவ்வாறு தீயிணை அணைத்தல் என்பன தொடர்பில் கொழும்பில் நடைபெறவுள்ள பயிற்சிக் கருத்தரங்கில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிகள் யாவும் இரு கட்டங்களாக குறிப்பாக யாழ்.மாநகர சபையிலுள்ள தீயணைப்பு படைப்பிரிவினைச் சேர்ந்த 18 பேரும் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

முதல் 9 பேரும் கொழும்பிற்கு பயிற்சிக்கு சென்றவுடன் ஏனைய 9 பேர் இங்கு கடமையில் ஈடுபடுத்தப்படுவது போல் சுழற்சி முறையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (6-4)




# நல்லூர் கந்தன் திருவிழாவின் போது சிறுவர் தொழிலாளர்களுக்கு தடை

## மாநகர முதல்வர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

**வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க்கந்தன் ஆலய திருவிழாக்காலத்தில் வியாபார நிலையங்களில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதனை தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.**



திருவிழாக்கால வியாபார நிலையங்களில் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவோர் மீது உரிய அமைப்புக்களினூடாக சட்ட நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி வருகின்ற நிலையில் திருவிழாக்காலங்களில் வியாபாரத்தில்ஈடுபடுகின்றவர்களும்கடைத் தொகுதிகளை அமைத்து வருகின்றனர்.

இவர்கள் தமது வியாபார நிலையங்களில் பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களை வேலைக்கமர்த்துவதனை தவிர்க்க வேண்டும்.

இதனைவிட கர்ப்பூரம் விற்றல், கச்சான், அர்ச்சனைப் பொருட்கள் விற்றல் என்பவற்றிலும் சிறுவர் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நல்லூர்க்கந்தனின் கடந்த வருட திருவிழாவின் போது பல சிறுவர் தொழிலாளர்கள் சிறுவர் நன்னடத்தை பிரிவினராலும் நல் லூர் பிரதேசசபையினராலும் இனங்காணப்பட்டு அதிலிருந்து அவர்கள் கட்டாயப்படுத்தல் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# இரண்டு மணித்தியாலம் வீதித்தடை அகற்றப்படும்

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசாமி ஆலயத்தினைச் சூழவுள்ள வீதிகளில் போடப்பட்டுள்ள வீதித்தடைகள் பகல் நேரத்தில் மட்டும் 12 மணி தொடக்கம் 2 மணி வரையிலும் அகற்றப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாவதையடுத்து அதற்கான ஏற்பாடுகள் குறித்து விசேட ஊடகவியலாளர் கலந்துரையாடல் யாழ். மாநகர சபையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.




இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மாநகர முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்

கடந்த நல்லூர் திருவிழாக் காலங்களில் பகல் வேளைகளில் சில மணிநேரங்களும் இரவில் 9 மணிக்கு பின்னரும் நல்லூரைச் சுற்றியுள்ள வீதித்தடைகள் அகற்றப்பட்டிருந்தன.

ஆனால், இம்முறை இதில் மாற்றம் கொண்டு வரப்பட்டு நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள கடைகளுக்கு பொருட்களைக் கொண்டு வருவதற்காகவும் ஆலயச் சூழலிலுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் பொருட்களைக் கொண்டு சென்று வருவதற்காகவும் பகலில் இரண்டு மணி நேரம் மட்டும் வீதித்தடை அகற்றப்பட்டிருக்கும்.

இதனைத் தவிர்ந்த மற்றைய நேரங்களில் வீதித் தடைகள் போடப்பட்டிருக்கும் என முதவர் மேலும் தெரிவித்தார். (6-23)

## அலங்கார உற்சவம்

யாழ்.மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய 9 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெற்று நிறைவு பெறும்.

இதில் விசேட அம்சமாக ஸ்ரீ ஞான துர்க்கையின்தெய்வீகஅருள்கலையுடன் கூடிய வாள் நடனம் தேர்த் திரு விழா அன்று நடைபெறவுள்ளது. (6-272)

# எதை இழந்தாலும் பண்பாட்டை இழக்கோம்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(மானிப்பாய்)

நாம் எதை இழந்துவிட்டாலும் நம் வீரத்தையும் பண்பாட்டையும் இழக்கமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கைதடி கலைநகர் துர்க்கா சனசமூக நிலையத்தால் சந்திரக்கிராய் சவாரித்திடலில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி போட்டி அண்மையில் நடத்தப்பட்டுள்ளது. இதில் வெற்றியீட்டியவர்களுக்கு மதிப்பளித்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

பண்டைய எமது சமூகத்தின் சுவடுகளை பின்பற்றி நடக்கக்கூடிய விழுமியங்களில் இந்த மாட்டு வண்டிச் சவாரியும் ஒன்று. தமிழரின் இரத்தத்தில் ஊறிய அம்சமான வீரத்தின் வெளிப்பாடு இது. காளை அடக்குதல் நமது பண்பாடு.

ஆண்மையை நிரூபிக்க அன்று காளை அடக்குதல் ஒரு வீர விளையாட்டாக இருந்தது.

அது இன்றும் பின்பற்றப்படுகின்றது.

நவநாகரிக உலகில் கணனி விளையாட்டுக்களில் உலகம் சுருங்கிவிட்ட நிலையில் தமிழர்கள் கணனியிலும் உச்ச நிலையில் இருக்கின்ற அதேவேளை எமது பண்பாடான இப்படியான பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு முன்னுரிமை அளித்து வருவதும் நாம் அழிந்துவிடாமல் இருப்பதற்கு பலமாய் இருக்கின்றது.

எனவே, இந்த பாரம்பரிய விளையாட்டு சிந்தனையாளர்களை, அதை செயல் வடிவமாக்கு கின்றவர்களை, அதை எமது சந்ததிக்கும் கையளிக்கின்றவர்களை, நாம் போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம் என்றார். வடமாகாணத்திலுள்ள பல சவாரி மாடுகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு போட்டியிட்டு பரிசில்களை தட்டிச் சென்றன. (6-23)

# மஹோற்சவமும் சமய அறிவு போட்டியும்

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

உற்சவ நாட்களில் இரவு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் வழங்கும் சைவ நற்சிந்தனை உரை இடம்பெறும்.

இச்சிந்தனை உரையை மையப்படுத்தி இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமஸ்கிருத விற்பன்னர் அமரர் அச்சுவேலியூர் ச.குமாரசுவாமிக் குருக்கள் நினைவுச் சைவசமய அறிவுப் போட்டி இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டுவோர் தேர்த்திருவிழா நாளில் பரிசில்களும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். நிகழ்வில் இணுவில் தர்மதாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீனக்குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், அகில இலங்கை இந்து கலாசாரப் பேரவையைச் சேர்ந்த சி..சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை அமரர் ச.குமாரசுவாமிக் குருக்களால் நிறுவப்பட்ட அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் தமிழ் மற்றும் சைவ சமயப் பாடங்களில் உயர் புள்ளி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக இந்துக்குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். (6)

# பாடசாலை மாணவர்களுக்கு சனசமூக நிலையத்தினர் உதவி

திக்கம் சனசமூக நிலையத்தினர் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு பின்தங்கிய பிரதேச மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் ஒழுங்குபடுத்தலில் இந்த உதவிகள் மாணவர்களுக்கு கிடைத்து வருகின்றன.

இதன் இன்னொரு கட்டமாக அண்மையில் நாகர்கோவில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவிகளை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வழங்கி வைத்தார்.

இதில் திக்கம் மத்திய சனசமூக நிலையம் சார்பில் தினேஷ், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் சுரேன், பாலர் பாடசாலையின் தலைவர் உட்பட பாடசாலை சமூகத்தினர் கலந்து கொண்டனர்.

கிடைக்கப்பெற்ற உதவிகள் தமது பாலர்களின் ஆரம்பக் கல்விக்கு நிறைந்த ஊக்கத்தை தருவதாகவும் இத்தகைய காலமறிந்து செய்யப்பட்ட உதவிக்கு தாம் மிகுந்த நன்றிகளை தெரிவிப்பதாகவும் நாகர் கோவில் பாலர் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர். (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உளப்பாதிப்புக்கள் குறித்து விரிவான ஆய்வுகள் தேவை

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

யுத்த காலத்துக் குண்டு வெடிப்புச் சத்தங்களும், குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல்களும் தமிழ் மக்களின் உளநலத்தில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

ஒலிபெருக்கிகளின் பாவனையை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக நேற்று புதன்கிழமை வடமாகாண விவசாய அமைச்சில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மத குருமார்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்,

இரவு நேரங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக ஊடகங்கள் சுட்டிக்காட்டி வருவதோடு பொதுமக்களும் எங்களிடம்முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

அதிக சத்தத்தால் உறையாடலும் தூக்கமும் பாதிக்கப்படுவதாகத்தான் நம்மில் பலரும் நினைத்துக்கொண்டிருககிறோம். தண்ணீரில் கலக்கும் நச்சு மாசுகள் போல, காற்றில் கலக்கும் புகை மாசுகளபோல, காற்றில்வந்து சேரும் இரைச்சலும் ஒரு மாசு தான். இந்தச் சத்தத்தால் அதி திறமையான மாணவர்கள் கூட படிக்க முடியாத சூழ்நிலை ஏறபட்டு பரீட்சைகளில் தோல்வியடைவதாக ஆய்வுகளில் தெரிய வந்திருக்கிறது. அது மாத்திரமல்ல, அதிக இரைச்சல்களின் மத்தியில் வாழநேரிடுபவர்கள் வன்முறையாளர்களாகவும் ஆதக்க மனப்பான்மை கொண்டவர்களாக வும் மாறுவதும் சமீபத்திய ஆய் வுகளில் தெரிய வந்திருக்கிறது. நீண்ட காலம் யுத்தச் சூழலில் வாழ்ந்த நாங்கள், குண்டுவீச்சுக்களால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் பற்றியும் அங்கவீனங்கள் பற்றியும் அதிகம் பேசியிருக்கின்றோம். ஆனால, குண்டுவீச்சு இரைச் சல்களால ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றி அக்கறை கொள்ளவில்லை. யுத்தத்துக்குப் பின்னர் வன் முறையும, வாள்வெட்டுக் கலாசாரமும் தலை தூக்கியிருப்தற்கு இந்த இரைச்சல்கள் உளரீதியாக ஏற்படுத்திய பாதிப்புகளும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். (6)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.தே.திருமுருகராஜன்




எமது கல்லூரி ஆசிரியரான திரு.தே.திருமுருகராஜன் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி A.A.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவரது சமூகப் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

(7150)

---



## நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவம்- 2014
### யாழ்ப்பாணம்

வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!
உமரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணிசிவனருள் பாலா பரவரமுரள பரமதயாளா
(சிவயோக சுவாமிகள்)

அன்புடையீர்

யாழ். நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் 01-08-2014 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாட்களும் அன்னதானமும் விடியற் காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்னதான பணிக்கு உதவ விரும்பும் அடியார்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே உதவிகளைச் செய்யலாம். தங்கள் பேருதவிக்கு நல்லைக்கந்தன் அருள்புரிவாராக.

(7171)

**மூத்ததம்பி அன்னதானமடம்,**
**139, கோவில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.**
**T.P:-075 2207896**

---



## சின்னமடு மாதா யாத்திரைத் தல பெருவிழாவை முன்னிட்டு கடைகள் போடுவதற்கான விளம்பர அறிவித்தல்

சரவணை சின்னமடுமாதா யாத்திரை ஸ்தல பெருவிழாவானது 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04.08.2014 திங்கட்கிழமை நற்கருணை விழாவும் அதனைத் தொடர்ந்து மறுநாள் 05.08.2014 செவ்வாய்க் கிழமை காலை திருவிழாத் திருப்பலியும் இடம்பெற இருப்பதால் வருடா வருடம் இப்பகுதியிலே கடைகளை நிறுவுபவர்களும் மற்றும் இனிப்பு, கச்சான், ஐஸ்கிறீம் கடைகளை போடுபவர்களும் முன்கூட்டியே உங்கள் இடத்தை பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**01.05.2014 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கடைகள் கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும்.** எனவே வியாபாரிகள் நேரத்திற்கு சமூகம் அளித்து உங்கள் பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ளவும். 04,05/08/2014 ஆகிய நாட்களில் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதை தங்கள் கவனத்திற்கு தருகின்றோம்.

**இங்ஙனம்.**

(7168) **பரிபாலகர். வண.பிதா ஞா.பீற்றர்**

---

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 6 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L, Dip. in Electronics / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3426 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 65 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கலைப் பட்டதாரி / சங்கீத ஆசிரியர்<br>தொ.இ: G/3452 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 32.25 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, MSc / பொறியியலாளர் (UK – Citizen)<br>தொ.இ: B/3427 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 27.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/3453 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 22.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, PHd – Following (USA – Student Visa) / பொறியியலாளர்<br>தொ.இ: B/3428 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 16.5 சூரி செவ் 3 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.Com / வங்கி காசாளர்<br>தொ.இ: G/3454 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 31<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Hotel Management / Hotel மேற்பார்வையாளர்<br>தொ.இ: B/3430 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 52 செவ் 8இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/3458 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரவெட்டி பிதேச செயலக உத்தியோகத்தர்கள் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் வல்லை வெளியில் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# தனிநாயகம் அடிகளாரின் உருவச்சிலை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள மடத்தடி (கொன்வென்ற் பாடசாலை அருகில்) அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகள் நினைவு முற்றம், அடிகளாரின் பிறந்த தினமாகிய நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து முன்னெடுக்கும் இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தெய்வ வணக்கத்தை யாழ். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கு.பாலஷண்முகனும் தொடக்கவுரையை தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாக்குழு இணைச்செயலர் அருட்பணி அ.பி.ஜெயசேகரமும் வழங்குவார்.

சிலை திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் தனிநாயகம் அடிகள் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். இதில் தமிழ்ச்சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, தனிநாயகம் அடிகளாரின் கல்வித்துறைசார் பங்களிப்பு என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார். திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் 'தமிழ்த்தாயின் புகழானாய்' என்ற நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (6)

# தலைமைத்துவ பயிற்சி செப். 7 இல் ஆரம்பம்

(கொழும்பு)

இவ்வருடம் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி செப்டெம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாகுமென உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்று கட்டங்களில் நடக்கவிருக்கும் இந்தத் தலைமைத்துவப் பயிற்சியின் முதலாம் கட்டம் செப்டெம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரையிலும், இரண்டாம் கட்டம் ஒக்டோபர் 4ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 21ஆம் திகதி வரையிலும் நடைபெறுமென உயர்கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்கல்வி அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் இந்தத் தலைமைத்துவப் பயிற்சியில் 23 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்கேற்பார்கள் எனவும் தெரியவருகின்றது. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 350 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 160 | 120 | 150 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 180 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 90 | 100 |
| பயற்றங்காய் | 50 | 70 | 100 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 120 | 210 | 160 |
| முருங்கைக்காய் | 15 | 50 | 30 | 40 |
| போஞ்சி | 100 | 100 | 80 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 91

Search for people, places and things   Nagendram   Home

கீர்த்தி லவ்

நாய் மாதிரி அலைஞ்சா அவன் பிச்சைக்காரன்




நாயோட அலைஞ்சா அவன் பணக்காரன்

கரொலின் கெனி

மெய்யையும் தாண்டி வாழும் பொய்க்காத மெய்க்காதல்..




கிரி சிவராஜா

**என் அம்மா சொன்ன அருமையான பொய்களில் ஒன்று**



**"கடைசி உருண்டைல தான் எல்லா சத்தும் இருக்கு. இத மட்டும் வாங்கிக்கோ கண்ணா"**

கனி தேவதிகா




கீர்த்து கரன்

## கடவுளுடன் ஓர் நாள்

ஒருவன் பழைய கட்டடத்தினூடே சென்றுகொண்டிருந்தான். அப்போது "அப்படியே நில்... அசையாதே" என்று ஒரு சத்தம். ஆனால் எங்கிருந்து வந்தது எனத் தெரியவில்லை.. என்றாலும் அசையாமல் நிற்க, அவன் போகவிருந்த வழியில் ஒரு சுவர் இடிந்து விழுந்தது. இவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்..



மற்றொரு நாள்... பேருந்தில் ஏறப்போனபோது மீண்டும் அதே குரல்... "இந்த பேருந்து வேண்டாம்...". அவனும் அதைத் தவிர்த்து அடுத்த பேருந்தில் செல்லும் போது இவன் சென்றிருக்கவேண்டிய பேருந்து கவிழ்ந்திருப்பதைப் பார்த்தான்... மிகவும் ஆச்சரியத்துக்குள்ளானவனாய், யார் என்னை ஒவ்வொரு முறையும் காப்பாற்றுவது...? என நினைத்தான்... அதற்கும் உடனடியாக பதில் வந்தது...

"நான் உன் தெய்வம்"

இவன் அடுத்தபடியாக கேட்டான்,, "ஓ காவல் தெய்வமே... என் கல்யாணத்தப்ப எங்கே போய்த் தொலைஞ்சே"...?

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)






யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் 33 வருடங்களாக ஆசிரியராகவும் 5 வருடங்களாக பகுதித்தலைவராகவும் உப அதிபராகவும் கடமையாற்றி விடைபெற்று சென்ற திருமதி.சுதாநிதி யோகேஸ்வரனின் பிரிவுபசார விழா அண்மையில் மேற்படி வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது பாடசாலை மாணவ முதல்வர் ஆ.வித்யா உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

நிழல்கள்




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய முன்னாள் தலைவரும் அமரர் அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குருபூசை தினம் துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது திருவுருவச்சிலைக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வ.அகிலேஸ்வரக்குருக்கள் மலர் மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட துர்க்காதேவி மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் சிறார்களுக்காக நவீன வடிவமைப்புக்களுடன் நிர்மாணிக்கப்பட்ட சாகசப் பூங்கா அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து பூங்காவிற்கான பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்து வைத்ததையும் சாகசப் பூங்காவினை விருந்தினர்கள் உட்பட பார்வையாளர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)






கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக கையேற்பு நிகழ்வு நீர்வேலி செல்வமஹால் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்ட ஜெகநாதன் - தற்பரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் புதிய நிர்வாகத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி இரண்டாம் உப ஆளுநர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- நல்லூர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அழகனுக்கு ஏற்ற அழகி



பிருதிவிரூபன் என்னும் அரசன் பிரதிட்டானம் என்ற நகரத்தை ஆட்சி செய்தான்.

அவன் மிக அழகானவன். அவனுக்கு இணையாக தட்சசீலத்தில் எந்த அரசனும் கிடையாது. அவனுக்குத் திருமணம் ஆகவில்லை.

தன்னுடைய அழகுக்கு ஈடாக எந்த உள்ள ஒரு பெண்ணையே மணக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தான் பிருதிவிரூபன்.

ஒருநாள் துறவி ஒருவர் வந்து அரசனைக் கண்டார்.

துறவியை வரவேற்று உபசரித்தான் அரசன்.

மகிழ்ச்சி அடைந்த துறவி அரசனே தட்சீலமே உன்னைப் பார்த்து வியப்படையும் படியான எழில் மிகுந்தவனாக நீ இருக்கின்றாய்.

முத்திதாரா நகரத்தின் அரசன் ரூபதாரனுக்கு ரூபலதா என்ற பெண் இருக்கிறாள். மிகவும் அழகானவள். தன்னுடைய அழகுக்கு ஏற்ற மணாளனையே மணப்பேன் என்று உறுதியாக கூறுகிறாள்.

உங்கள் இருவருக்கும் சரியான பொருத்தமாக இருக்கும் என்பது எம் கருத்து என்று கூறிவிட்டு சென்றார் துறவி.

குமாரதத்தன் என்னும் ஓவியனை உடனே அழைத்து வரச்செய்தான் அரசன்.

தன்னைப் போன்ற ஒரு சித்திரம் தீட்டி வருமாறு ஓவியனிடம் சொன்னான் அரசன்.

ஒவியனும் இரவு பகலாக அமர்ந்து அரசனைப்போல சித்திரம் வரைந்து கொண்டு வந்து காட்டினான்.

தன்னுடைய உருவத்தைச் சித்திரத்தில் பார்த்து நாம் இவ்வளவு அழகாக இருக்கிறோமோ என்று ஆச்சரியம் அடைந்தான் அரசன்.

பிறகு ஓவியத்தை வரைந்த ஓவியனுக்குத் தகுந்த பரிசுகளை கொடுத்தான் அரசன். அதன்பின் ஓவியனிடம் தனிமையில் முத்திதாரா நகரத்தின் அரசனான ரூபதாரனுக்கு எழில் மிக்க ரூபலதா என்னும் மகள் இருப்பதாகவும் அவள் எனக்குப் பொருத்தமானவள் என்று துறவி ஒருவர் வந்து சொன்னார்.

ஆகையால் நீ போய் அந்த அரசனை சந்தித்துப் பேசி ரூபலாதவையும் பார்த்து அவள் ஒவியத்தையும் வரைந்து அவள் எனக்கு கிடைப்பதற்கான வழியை அறிந்து வருக என்று கூறி ஓவியனை அனுப்பினான்.

ஓவியன் தான் வரைந்த அரசனின் ஓவியத்தைக் எடுத்துக் கொண்டு முத்திதாரா சென்று அரசனைக் கண்டான்.

எவரையும் பார்த்த உடனே தத்துரூபமாக வரை வேன். பிரதிட்டான நாட்டு அரசர் பிரதிவிரூபன் இந்த வட்டாரத்திலேயே ஈடு இணையற்ற அழகு வாய்ந்தவர். அவர் தம்முடைய உருவத்தை வரையச் சொல்லி நிறைய சன்மானம் தந்துள்ளார் என்றான் ஒவியன்.

உடனே அரசன் அந்தப் படத்தைப் பார்க்கலாமா? என்று கேட்டான்.

ஓவியன் தான் கொண்டு வந்திருந்த படத்தை எடுத்து வந்து காண்பித்தான்.

அதைப் பார்த்ததும் இவனே தன் மகள் ரூபலதாவுக்குப் பொருத்தமானவன் என்று உள்ளம் மகிழ்ந்தான் அரசன்.

மேலும் ரூபலதாவின் உருவத்தை வரையச் சொல்லி ஓவியனுக்கு பரிசு அளித்தான்.

அந்த ஓவியத்தைப் பார்த்து அரசனும் ரூபலதாவும் ஓவியனைப் பாராட்டினர்.

அதைக் கொண்டு சென்று பிருதிவிரூப அரசனிடம் காண்பித்து தன் நாட்டுக்கு விருந்தினனாக வருமாறு அழைக்க ஓவியனுடன் ஒரு அமைச்சனையும் அனுப்பினான் அரசன்.

பிருதிவிரூபன் ரூபலதாவின் படத்தைப் பார்த்ததும் அவள் அழகில் மனதை பறிகொடுத்துவிட்டான். உடனே தன் பரிவாரங்களுடன் முத்திதாராவுக்குப் புறப்பட்டுச் சென்றான்.

ஆனால் வழியில் காட்டு வாசிகள் தங்கள் மீது படையெடுத்து வருவதாக நினைத்து பிருதிவி ரூபனையும் அவனுடைய படைகளையும் எதிர்த்தனர். முத்திதாரா அரசனுக்கு தகவல் தெரிந்தது.

அவன் தன் படைகளை அனுப்பி தன்னுடைய விருந்தினாராக் தெரிவித்துக் காட்டுவாசிகளைச் சமாதானப்படுத்தினான்.

பிறகு பிருதிவிரூபன் பாரிவாரங்கள் சூழ முத்திதாரா சென்று விருந்து உண்டான். ரூபலதாவுக்கும் பிருதிவி ரூபனுக்கும் மிக ஆடம்பரத்துடன் திருமணம் நிறைவேறியது.

07.2014
31

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 30 BC - மார்க் அந்தனியின் படைகள் ஆகுஸ்டசின் படைகளை வென்றனர். ஆனாலும் அவனது பெரும பாலான படையினர் அவனை விட்டுவிலகியதால் அவன் தற்கொலை செய்துகொணடான்.
- 781 - பியூஜி மலையின் பதிவு செய்யப்பட்ட முதல் குமுறல் இடம்பெற்றது.
- 1492 - ஸ்பெயினிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1498 - தனது மூன்றாவது பயணத்தின்போது கொலமபஸ் டிரினிடாட் தீவை அடைந்தார்.
- 1588 - ஆங்கிலேயர்களுக்கும் ஸ்பானியர்களுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது கடற்படைச் சமரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- 1655 - உருசியா லித்துவேனியாவின் தலைநகர் வில்னியூசைக் கைப்பற்றி ஆறு ஆண்டுகள் தமது ஆட்சியில் வைத்திருந்தது.
- 1658 - அவுரங்கசீப் இந்தியாவின் மொகலாயப் பேரரசின் மன்னர் ஆனார்.
- 1741 - புனித உரோமப் பேரரசன் ஏழாம் சார்ல்ஸ் ஆஸ்திரியாமீது படையெடுத்தான்.
- 1805 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சினனமலை பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டார்.
- 1865 - உலகின் முதலாவது குறுகிய அகல தொடருந்துப் பாதை ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- 1938 - கிரேக்கம், துருக்கி, ருமேனியா, யுகோசுலாவியா ஆகிய நாடுகளுடன் பல்கேரியா அமைதி உடன்பாட்டிற்கு வந்தது.
- 1954 - ஆர்டிடோ டெசியோ என்பவர் தலைமையிலான இத்தாலிய குழு ஒன்று கே-2 கொடு முடியை எட்டியது.
- 1964 - சந்திரனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை ரேஞ்சர் 7 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1971 - அப்போலோ 15 விண்வெளி வீரர்கள் லூனார் ரோவர் வண்டியை சந்திரனில் செலுத்தி சாதனை புரிந்தனர்.
- 1976 - வைக்கிங் 1 விண்கலத்தினால் செவ்வாய்க் கோளில எடுக்கப்பட்ட புகழ்பெற்ற மனிதமுகம் படத்தை நாசா வெளியிட்டது.
- 2006 - பிடெல் காஸ்ட்ரோ தனது அதிகாரத்தை தற்காலிகமாக தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.
- 2007 - வட அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவம் தனது மிக நீண்டகால இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அங்கிருந்து வெளியேறியது.

### பிறப்புகள்

- 1704 - கேப்ரியல் கிராமர், சுவிட்சர்லாந்து கணிதவியலாளர் (இ. 1752)
- 1874 - செய்குத்தம்பி பாவலர், தமிழ் எழுத்தாளர், சதாவதானி (இ. 1950)
- 1912 - மில்ட்டன் ஃப்ரீட்மன், பொருளியல் நிபுணர் (இ. 2006)
- 1966 - ஜே.கே.ரௌலிங், ஆங்கில எழுத்தாளர்

### இறப்புகள்

- 1805 - தீரன் சின்னமலை, குறுநில மன்னன் (பி. 1756)
- 1996 - [illegible] எழுத்தாளர் (பி. 1920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"



...பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே கிரிக்கெட் போட்டி என்றால் இனம் புரியாத டென்ஷன் இருதரப்பிலும் ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. இரு நாடுகளும் விளையாடுகின்றன என்பதை மறந்து யுத்த களத்தில் இருநாடுகளும் மோதுவதைப் போன்றே ரசிகர்கள் இதைப் பார்க்கிறார்கள். இந்தக் கசப்புணர்வு கிரிக்கெட், ஹாக்கி என எல்லா விளையாட்டுக்களிலும் தொடர்கிறது. இந்திய



பாகிஸ்தான் பிரிவுனைக்கு முன்பும்சரி, இப்போதும் சரி பங்காளிகள் போன்றே இருநாட்டு ரசிகர்களும் மோதிக் கொள்கிறார்கள். உலகக் கோப்பை நடக்கும்போதோ அல்லது பல நாடுகளுக்கு இடையே நடக்கும் வேறு போட்டிகளின்போதோ இந்தியா யாருடன் தோற்றாலும் பரவாயில்லை. ஆனால், பாகிஸ்தானிடம் மட்டும் தோற்கக் கூடாது. அதேபோல் கோப்பையை பாகிஸ்தான் மட்டும் ஜெயிக்கக் கூடாது. வேறு யார் ஜெயித்தாலும் கவலை இல்லை என்பதுதான் இங்குள்ளவர்களின் எண்ணமாக இருக்கும். அதே போக்குத்தான் பாகிஸ்தானிலும் காணப்படுகிறது. ஆனால், நம்மவர்கள் ரகளையில் இறங்குவதில்லை. பாகிஸ்தானிலோ நிலைமையே வேறு. மாற்று அணியினர்; நன்றாக விளையாடினால் ஆரஞ்சு தோல்களை எறிவது. காகிதத்தை சுருட்டி வீசுவது. கூக்குரலிடுவது. கூச்சலிடுவது. கவனத்தைச் சிதற அடிப்பது என எல்லா வகையிலும் தொல்லை தருவார்கள். சில சமயம் களத்தில் இறங்கி மற்ற அணியினரைத் தாக்கவும் தயங்க மாட்டார்கள். அதிலும் இந்தியர்கள் என்றால் கேட்கவே வேண்டாம். இந்தியர்களுக்கு எதிரான உணர்வு என்பது அவர்களுக்கு ரத்தத்திலேயே ஊறிய ஒன்று. பாகிஸ்தானிய பௌலர்கள் கையில் பந்துடன் ஓடிவரும்போது யமன் பாசக்கயிற்றுடன் ஓடி வருவது போன்றே தோற்றமளிப்பார்கள். இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் ரீதியாக சமூகமாக உறவு இல்லை என்றால் உடனே கிரிக்கெட் விளையாட்டுக்கள் நிறுத்தப்படும். இந்திய- பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இரு நாடுகளும் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடியதாக வரலாறு இல்லை. எப்போதெல்லாம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் மோதல் வெடிக்கிறதோ அப்போதெல்லாம் முதலில் ரத்துச் செய்யப்படுவது கிரிக்கெட் போட்டிகள்தான்.

### குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

வாக்கரிடம் இருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கில் இருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண்டும் என்று கூறுவது போல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



கே. ரமேஷ் (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 07 இல் கூட்டெண் 05 இன் பலன்கள்

**52**

தோற்றம்

கேதுவில் புதன் சேர்ந்த ஆதிக்கம் இவருக்கு. நல்ல உயரம் இருக்கும். உருண்டை முகம் பெரிய தலையில் சிறியதாக அழகாக இருக்கும். சாதாரண அளவு நெற்றி. அடர்ந்த தலைமுடி அடர்ந்த புருவங்கள் இருக்கும். அறிவாளியின கண்கள் எடுப்பான நடுத்தர மூக்கு, பருத்த உதடுகள் இருக்கும். கவர்ச்சியாக கண்ணியமான அழகுத் தோற்றமிருக்கும். கன்னம் உப்பியிருக்கும். கை கால்கள் நீளமாக உள்ளங்கை பாதங்கள் பெரியவையாக இருக்கும்.

குணம்

இவர்கள் வாட்சாட்டமாக இருப்பார். ஆனாலும் தந்திரக்காரர்களே தவிரச் சண்டையிக் கூடியவல்லர் ஆனால் மிகத் துணிவு உள்ளவர். மிகவும் கவனமாக இருப்பர். எந்த வம்பையும் இழுத்து விட்டுக் கொள்ளமாட்டார் அமைதியையும் விரும்புவர். தெய்வ பக்தி உள்ளவர். நன்கு சிந்திக்கும் நுட்ப அறிவிருக்கும். கூடவே அருமையாகத் திட்டமிடுவார். செயற்படுத்தவும் செய்வார். இவர்களுக்கு தெய்வ அனுக்கிரகம் உண்டு. இரக்கமுண்டு. பிறருக்கு நிறைய உதவுவர் புதுமையை சிந்தனை, பேச்சு செயலில் கொண்டிருப்பார்.

கலவரம் அநியாயம் துன்பம் நேர்ந்து விடுமோ எனப் பயப்படுவார். ஆனால் இடிந்து போய்விடாமல் ஆகவேண்டியதைப் பார்ப்பர். ஒழுக்கமாகவும் குடும்ப சாதி வழக்கத்தை மீறாமல் இருப்பார். ஆசைகள் இருந்தாலும் கட்டுப்படுத்திக்கொள்வர். நேர்மையாக உரிமைப்படி வருவதையே தமக்கென எடுத்துக் கொள்வர். நல்லவராக நடப்பர். ஆசையால் அத்துமீறமாட்டார். சட்டதிட்டங்களை மீறி எதையும் அடைய விரும்ப மாட்டார். ஞானமும் உலகலாவிய உலகாயத அறிவும் இருக்கும். எவருக்கும் எந்தத் தீங்கும் செய்யமாட்டார்.

தன்னம்பிக்கை உள்ள இவர்கள் சிறு தொழிலாகத் தொடங்கினாலும் பெரிய தொழிலாக்கி கொண்டு விடுவார். படிப்பை விட பொதுச் சங்கதிகளில் அதிகம் தெரிந்து வைத்திருப்பார். உடல் படுத்தும் பருத்தும்விடும். படிப்பிலும் வேலையிலும் காலக்கெடுவைத் தவறவிட்டு விடுவர். பார்வைக்கு இவர்கள் அமைதியானவர்கள். ஆனால் கோபம் வந்தால் தூள் பறக்கும். நல்ல அறிவிருக்கும்.

நன்றாகப் பேசுவர். பிறருக்கு சிறந்த யோசனை கூறுவர். எந்த நண்பரிடமும் நெருங்கி விடமாட்டார். அழகுணர்வு உள்ள இவர்கள் எதையும் நன்கு பாதுகாப்பார்.

குடும்பம்

இவர்களுக்கு 25 வயதிக்கு மேலேயே திருமணம் ஆகும். தந்தை தாய் ஆதரவை விட சுயமாக முன்னுக்கு வருவதையே விரும்புவர். ஒழுங்காக ஓரளவு படிப்பார். நல்ல மனைவியமைவாள். வீட்டை நன்கு நிர்வகிப்பாள். இவர்களுக்கு வேண்டிய தொண்டு புரிவாள். இவர் கோபித்துச் சுட்டெரித்தாலும் தாங்கிக்கொள்ளுவாள். அநேகமாக பெண் வாரிசே உண்டாகும். சிலருக்கு மணம் ஆகாமலும் போகும்.

நண்பர் அதிகம் அமையமாட்டார். இள வயதில் கால்கள் வாதத்தால் பாதிக்கும். பின்னால் படுக்கையில் அதிகம் இருக்க நேரிடும். உடற்பயிற்சி செய்வது முக்கியம்.

தொழில்

இவர்களுக்கு ஆபாரமூளை உண்டு. சூட்சும மனச்சக்தி இருக்கும். கலையும் கலை சார்ந்த தொழிலும் ஆர்வமிருக்கும். கதை, வசனம், பாடல்கள், எழுதல், இயக்குதல் வரும். நாடகம் போடலாம்.

பத்திரிகை பொருத்தமான துறை ஜர்னலிஸம் படிக்காமாலே நன்கு பத்திரிகை நடத்த இவரால் இயலும். விளையாட்டு வீரராக விளங்கலாம். மேடையிலும் பேச வல்லவராக இருப்பாராதலால் அரசியலிலும் ஈடுபட்டுப் பெரியபிரமுகராக வரமுடியும்.

புகைப்படம் நன்கு எடுப்பார். ஜோதிடம் சொல்ல வரும். இசை, நடனம், சித்திரம், கலைகள் நன்கு ரசிப்பார். நல்ல ரசனை உடையவர். வேளைக்கு உண்ண மாட்டார். சுறுசுறுப்பு நிறைய இருக்கும். வயதாக மூளை இளமையோடிருக்கும். வழுக்கை விழும். இவர் டி.டி.பி. டிசைன் செய்தலில் திறமையோடிருப்பர். நோய்களை குணப்படுத்தும் ஹீலிங் முறை வரும். இச்சக்தி இருக்கும். வைத்தியராகலாம். வக்கீலாகலாம் விஞ்



ஞானி பேராசிரியராகலாம். விவசாயம் செய்யலாம். பண்ணை தோட்டம் போடலாம்.

நோய்

மன சிந்தனை வேகம் அதிகம். ருமோட்டிசம் வாதம் கால்களைப் பலமிழக்கச் செய்யும். சுவாசப்பை நோய் வரலாம். ஆனாலும் ஆயுள் அதிகம் உண்டு. கோரியாஸ் தலையிலும், சைனுஸ், காது, கண் கோளாறு வரும். முதுகு, மூட்டுவலி பாதிக்கும். நரம்புத்தளர்ச்சி, பி.பி வரும். சக்கரை நோய் ஏற்படலாம். உணர்வைப் பாதிக்கலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த(உ/த) இரசாயனவியல் மாணவர்களுக்காக

# பச்சை வீட்டு விளைவும் வளி மாசடைதலுடன் தொடர்புடைய பிரச்சினைகளும்

**கடந்த 19 ஜூன் 2014 இல் கொழும்பு இரசாயனவியல் நிறுவகத்தில் (Institute of Chemistry) பேராசிரியர் K.R.மகாநாம வினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் வழங்கப்பட்ட குறிப்புக்கள் உள்ளடங்கிய வளிமண்டல மாசாக்கம் பற்றிய பகுதி மாணவர்களின் நலன் கருதிப் பரீட்சை நோக்கில் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றது. பேராசிரியர் K.R. மகாநாம க.பொ.த (உ/த) இரசாயனவியல் பாட வினாத்தாள் தயாரிக்கும் குழுவில் கைத்தொழில் மற்றும் சூழலியல் இரசாயனம் தொடர்பான வினாக்களுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஆவார்.**

பச்சை வீட்டு விளைவு
**(Green House Effect)**

பச்சை வீட்டு விளைவு என்பது ஒரு நன்மையான விளைவே ஆகும்.

♦ சூரியனில் இருந்து காலப்படும் சக்திக்கும் பூமியினால் மீளக் கதிர்வீசப்படும் சக்திக்கும் இடையே உருவாகும் நிலையான சமநிலையினால் பூமியின் வெப்ப நிலை மாறாது பேணப்படுகிறது.

♦ பூமியிலிருந்து சக்தியைக் காவிச் செல்லும் கதிர் வீசல்கள் செந்நிறக் கீழ்ப் பகுதிக்குரிய (IR) நீண்ட அலை நீளமுடைய அலைகளாகும்.

♦ பூமியிலிருந்து காலப்படும் கதிர்கள் யாவும் அண்ட வெளியை அடையுமாயின் பூமியின் வெப்ப நிலை மிகவும் குறைவடைந்து $-18^{0}C$ வரை செல்லலாம். இது சந்திரமண்டல வெப்ப நிலையை ஒத்த உயிர் வாழ்க்கைக்குச் சாத்தியமற்ற வெப்பநிலையாகும்.

♦ எனவே பூமியின் வெப்ப நிலையைச் சீராகப் பேணுவதற்கான ஒரு பொறி முறையே பச்சைவீட்டு விளைவாகும். இது உயிரங்கிகளின் நிலைத் திருப்புக்கு இன்றியமையாதது ஆகும்.

பச்சை வீட்டு வாயுக்கள்

காபனீரொட்சைட்டு - $[CO_2(g)]$

நீராவி $[H_2O(g)]$

மெதேன் $[CH_4(g)]$

நைதரசன் ஒட்சைட்டு $[N_2O(g)]$

ஓசோன் $[O_3(g)]$

குளோரோ புளோரோ காபன் (CFC)

கந்தகவீரொட்சைட்டு $[SO_2(g)]$

இந்த வாயுக்கள் பூமியில் இருந்து கதிர்வீசப்படும் கதிர்களை உறிஞ்சி மீளவும் பூமிக்கு அனுப்புகின்றன. இதனால் பூமியின் வெப்ப நிலை உயிரினங்களின் வாழ்க்கைக்கு ஏற்றதாக அமைகின்றது.

வளி மாசடைதலுடன் தொடர்புடைய பிரச்சினைகள்

1.பூகோள வெப்பமாதல் (Global worming)

2.அமில மழை (Acidrain)

3.ஒளி இரசாயனப் புகார் (Photo chemical smog)

4.ஓசோன் படை நலிவடைதல் (Ozone layer deple tion)

5.பூகோளம் குளிர்ச்சியடைதல் (Global cooling)

**பூகோள வெப்பமாதல்**



கல்வித் தரிசனம்

பச்சை வீட்டு வாயுக்கள் அனுமதிக்கக்கூடிய அளவினை விட கூடுதலாக நிலவும் போது வளிமண்டல வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்.

இது பூகோள வெப்ப மாதல் எனப்படும். இதற்குக் காரணமான பிரதான பச்சை வீட்டு வாயுக்கள் $CO_2$, $CH_4$, CFC போன்றன ஆகும்.

**பூகோள வெப்பமாதலின் விளைவுகள்**

1.துருவப் பகுதி பனிக்கட்டி உருகுதல்

2.கடல்நீரின் வெப்பவிரிவால் சிறு தீவுகள் கடலில் மூழ்குதல்

3.மண்ணின் ஈரப்பதன் அற்றுப்போவதால் பாலைவனமாதல்

4.நன்னீர் வற்றிப்போதல்

5.கால நிலையில் மாற்றம் ஏற்படுதல்

6.உயிரினப் பல்வகைமை மாறுபடுதல்

7.தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் வெப்பத்தினால் பாதிப்பு ஏற்படுதல் உதாரணம் வெப்பம் சார்ந்த நோய்கள் ஏற்படுதல்

8.ஒளித்தொகுப்பின் அளவு கூடுதல்

9.உயர்ந்த குத்துயரம் கொண்ட நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் விரிவாகுதல் (நேர் விளைவுகள்)

**பூகோளம் குளிர்ச்சியடைதல் (Global Cooling)**

புவி மேற்பரப்பில் தூசுத் துணிக்கைகளும் ஈரலிப்புத் தன்மையும் அதிகரிக்கும் போது முகிலின் மூடுகை அதிகரிக்கும். இதனால் சூரியனிலிருந்து வரும் கூடுதலான வெப்பம் பூமியை அடையாமல் திருப்பி அனுப்பப்படும். இதனால் புவி மேற்பரப்பிலிருந்து காலப்படும் IR கதிர்களின் வீசலின் அளவும் குறையும். இதனால் வளிமண்டலம் குளிர்ச்சியடையும்.

**பூகோள வெப்பமாதலில் பிரதான பங்க வகிக்கும் வாயுக்கள்.**

1.காபனீரொட்சைட்டு ($CO_2(g)$

1750 இல் வளிமண்டலத்தின் $CO_2$ வாயுவின் செறிவு 280 ppm ஆகும். ஆனால் தற்போது 400 ppm ஐத் தாண்டி விட்டது.


வளிமண்டலத்தில் $CO_2(g)$ இனது அளவு அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள்

I மோட்டார் வாகனங்களில் எரிபொருட்களின் தகனம், கைத்தொழிற்சாலைகள், வீடுகளிலிருந்து அதிகளவு $CO_2(g)$ வெளியேறுதல்

II காடுகளை அழித்தல்

2.மெதேன் ($CH_4$ (g))

$CO_2$ வாயுவிற்கு அடுத்தபடியாக பூமியில் வெப்பத்தை அதிகரிப்பதில் மெதேன் வாயு முன்னிலை வகிக்கின்




றது. இதன் ஆயுட்காலம் $CO_2$ வாயுவுடன் ஒப்பிடும்போது குறைவாக உள்ளபோதிலும் சமகனவளவு $CO_2$ வாயு பூமியின் வெப்பத்தை அதிகரிக்க அதன் திறனுடன் ஒப்பிடும் போது மெதேனின் வெப்பம் அதிகப்படுத்தும் வீரியம் 20 மடங்குகள் அதிகமாகும்.

வளிமண்டலத்தில் $CH_4$ (g) இனது அளவு அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள்

I எரிபொருட்களின் தகனம் - குறை தகனத்தின் மூலம் தகனமடையாத ஐதரோகாபன்களாக இவை சூழலுக்குள் விடுவிக்கப்படுகின்றன.

II ஆடு, மாடு, எருமை போன்ற இரைமீட்டும் கால்நடைகளில் அவற்றின் இரைப்பையில் பதியும் பக்றீரியாக்களின் நொதித்தல் செயற்பாட்டின் மூலம் கணிசமான அளவு மெதேன் வெளியேறுகின்றது. ஒரு பசுவில் இருந்து தினமும் 300 லீற்றர்கள் வரையான மெதேன் வெளியேறுகின்றது என ஆர்ஜெண்டீனா ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

III நெல் வயல்களில் நீரைத் தேக்குவதால் கிடைக்கும் காற்றில்லாச் சூழலும் அதிகளவில் கிடைக்கக்கூடிய பசளைகளும் ஈரலிப்பும் சேர்ந்து பக்றீரியாக்களின் பெருக்கத்திற்குக் காரணமாக அமைந்து மெதேன் வாயுவை விளைவிக்கின்றன.

IV விலங்குகளின் கழிவுகளிலும் கழிவாகக் கொட்டப்படும் உணவுப் பொருட்களிலும் நுண்ணங்கிகள் தொழிற்படுவதன் மூலம் மெதேன் வாயு உருவாகிறது.

3.குளோரோ புளோரோ காபன் (CFC)

CFC இனது அளவு வளிமண்டலத்தில் குறைவாக காணப்படுகின்ற போதிலும் அவை நீண்ட வாழ்நாட் காலம் உடையவை. அத்துடன் (IR) கதிர்களை அகத்துறிஞ்சும் ஆற்றல் மிகக் கூடியனவுமாக இருக்கும். இதனால் இதனது பங்களிப்பும் உயர்வாக இருக்கும்.

**வளிமண்டலத்தில்CFC அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள்**

1.குளிரூட்டிகளில் குளிரூட்டும் வாயுவாக இருக்கும் CFC வளிமண்டலத்திற்கு விடுவிக்கப்படுதல்.

2.பெயின்ற் உற்பத்தி, மருந்து குளிகைகளின் உற்பத்தியில் CFC பயன்படுத்தப்படுகின்றது. இது வெளியேறி வளிமண்டலத்தை அடைதல்.

3.நுரையைத் தோற்றுவிக்கும் வாசனைத் திரவங்களின் தயாரிப்பு


4.IC சிப்களை (Chips) சுத்தப்படுத்தும் திரவங்களின் தயாரிப்பு (தொடரும்...)

க.வாணி முகுந்தன் M.Sc,Dip.in.Ed.
ஆசிரியர், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

# சாட்சியமளிப்பது சதிக்கு துணை போகும் செயலாகும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



ஐ.நா.சர்வதேச விசாரணை ஆணைக்குழுவிற்கு சாட்சியமளிப்பது இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய வாதிகளின் சதித் திட்டத்துக்கு துணை போகும் செயலாகும். எனவே இதனை கடுமையாக எதிர்க்கின்றேன் எனத் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு வெளி நாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளை பெறுவதில் எவ்விதமான தரப்பும் இல்லையென்றும் கூறினார்.

இதுதொடர்பாக சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீது யுத்தக் குற்றச் சாட்டுக்களை சுமத்தி சர்வதேச ரீதி யில் எமது நாட்டை தனிமைப்படுத்தி நெருக்கடியில் தள்ளிவிடுவதை இலக்காக வைத்தே ஐ.நா.சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

இது இலங்கைக்கு எதிரான சதித் திட்டம். எனவே அரசாங்கம் அதனை நிராகரித்து விட்டது. எனவே இவ்வாறானதொரு குழுவிற்கு இலங்கையர்கள் எவரும் சாட்சியம் வழங்கக் கூடாது.

அதற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விதி விலக்கானவர் அல்ல. எவரும் இக் குழுவிற்கு சாட்சியம் வழங்கக்கூடாது. அவ்வாறு சாட்சியம் வழங்குவோர் இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய வாதிகளின் சதித்திட்டத்திற்கு துணை போகின்றவர்கள் என்றே கருதப்படுவார்கள். அப்பட்டியலிலேயே அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இதனை கடுமையாக எதிர்க்கின்றேன்.

ஜனாதிபதியால் உள்ளூரில் விசாரணைக்காக நியமிக்கப்பட்ட மக்வேல் பரணகம விசாரணைக் குழுவிடம் சொல்ஹெய்ம் அல்லவரும் சாட்சியங்களை வழங்கலாம். இதனை எதிர்க்கவில்லை. ஏனென்றால் இக் குழு உண்மைகளை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நியாயமான விசாரணைகளை நடத்தும் உள்ளூர்க் குழுவாகும்.

இதற்கு ஆலோசனைகளை பெறுவதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டமையில் எவ்விதமான தப்பும் இல்லை. இதன் மூலம் உள்ளூர் விசாரணைக் குழுவிற்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் மேலும் வலுப்பெறும்.

இந் நிலை உருவாகும் போது எம்மை நெருக்கடியில் தள்ளிவிடும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைக்குழுவின் பலம் இழக்கப்படும் நிலைமை உருவாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைகள் இராஜதந்திர ரீதியில் வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்தல்



(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தினால் உள்ளக ரீதியில் விசாரணை நடத்தப்படவேண்டுமாயின் அது இராஜதந்திர ரீதியில் நடத்தப்படவேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் உள்ளக விசாரணை நடத்தினால் அது இராஜதந்திர ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள இணையமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் வெற்றிக்களிப்பில் திளைத்த அரசாங்கம் நாட்டை உரிய வகையில் வழிநடத்தவில்லை.

இதன் காரணமாகவே சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

மக்களின் நலன்கருதி இந்த அரசாங்கம் செயற்படுவதில்லை. இதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இவை குறித்து கவனம் செலுத்தாது அரசாங்கம் மீண்டும் தேர்தல் தொடர்பிலான பரபரப்பை ஏற்படுத்தி மக்களை திசை திருப்பி வருவதாக கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். (6)

# பதவிகளைப் பெறும் நோக்கில் நான் அரசியலுக்கு வரவில்லை

## பதவியை துறக்க தயார்-ராஜித

அமைச்சுப் பதவியை துறக்கத் தயார் என மீன்பிடித்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நான் அரசியலுக்கு வரவில்லை.அமைச்சுப் பதவியை எந்த நேரத்திலும் துறக்கத் தயார். நான் வெளியேறினேன் என்பதனால் அவ்வளவு பெரிய மாற்றம் ஏற்படப் போவதில்லை.

நாட்டையும் அப்பாவி வறிய மக்களையும் கருத்திற் கொண்டே நான் தீர்மானம் எடுக்கின்றேன்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதில் ஜனாதிபதி ஆர்வம் காட்டுகின்றார்.

நான் எந்தக் கட்சியில் எந்தப் பதவி வகித்தாலும் அது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

சோசலிசத்தின் ஊடாக மக்களுக்கு உதவி வழங்குவதே எனது நோக்கமாகும். என் நோக்கங்களிலிருந்து நான் ஒருபோதும் மாறப்போவதில்லை.

நான் ஜனாதிபதி மீது நேசம் கொண்டுள்ளதாக அடிக்கடி என்னிடம் தெரிவிப்பார். எனினும், ராஜித என்னை விடவும் கொள்கைகள் மீது அதிக பற்று கொண்டவர் என ஜனாதிபதி குறிப்பிடுவார்.

அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ,மனிதத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பேருவளையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (6)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்வாய் வடக்குப் பகுதியினைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் அதேயிடத்தினைச் சேர்ந்த 40 வயதுடைய 5 பிள்ளைகளின் தநதையினை சந்தேகத்தின் பேரில் கடந்த திங்கட்கிழமை கைது செய்ததாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் வீட்டிற்கு அருகில் வசித்து வரும் மேற்படி சந்தேகநபர் சிறுமியின் குடும்பத்துடன் சிநேகமாகப் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி சிறுமியினை கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் அழைத்துச் செல்வதாக கூறி, சந்தேகநபர் வியாபாரமூலைப் பகுதியிலுள்ள பற்றைக்குள் சிறுமியை அழைத்துச் சென்றுள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதியில் நின்றிருந்த இளைஞர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து அவ்விடத்திற்கு சென்ற பொலிஸார், சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

தொடர்ந்து, சிறுமி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டு அவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகவில்லை என மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்றதும் சிறுமியை பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி சந்தேகநபரை யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)

# கைத்தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கைத்தொழில் கண்காட்சி இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் க. சிவகரன் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் கைத்தறி நெசவு உற்பத்தி பொருட்கள், தும்புசார் உற்பத்தி பொருட்கள், மட்பாண்ட உற்பத்தி பொருட்கள், சிற்பி மற்றும் சிரட்டையிலான கைப்பணிப் பொருட்கள், பனை மற்றும் தெங்குசார் உற்பத்தி பொருட்கள் என்பன கண்காட்சியில் முக்கியமாக இடம்பெறுகின்றன.

மேலும் இக் கண்காட்சியிலிருந்து வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# அல்லற்படும் ஈழ அகதிகள்; அவுஸ்.அரசாங்கம் பாராமுகம்

(கொழும்பு)

ஓசியானிக் புரொடெக்டர் என்னும் சுங்க இலாகா கப்பலில் ஒரு மாத காலமாக தடுத்து வைக்கப்படிருந்த இலங்கை தமிழ் அகதிகள் மாற்ற ஆடைகள் இல்லாமல் கேர்ட்டின் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக அகதிகள் செயற்பாட்டாளரான இயன் ரிண்டோல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூன் மாதக் கடைசியில் கடலில் அவர்கள் வந்த படகில் அணிந்திருந்த ஆடைகளையே இன்னும் அவர்களில் பெரும்பான்மையினர் அணிந்திருப்பதாக தெரிவித்துள்ளார் .

இப்போது அங்கு நிலவும் குளிரான காலநிலையால் மேலும் நிலைமை மோசமடைந்துள்ளது .

கேர்ட்டின் முகாமில் முன்பு இருந்த அகதிகளிடமிருந்து புதியவர்களுக்கு கொடுக்கப்பட்ட உடைகள் அறவே போதாமல் உள்ளன.

முகாமில் இருந்து எமக்கு வந்த செய்திகளின் அடிப்படையில் குழந்தைகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளமை கவலை அளிக்கின்றது.

பிள்ளைகளில் 3 வயதுக்கு உட்பட்டவர்கள் அநேகமாக உள்ளனர். அவர்களுக்கான போதியளவு வசதிகள் ஒன்றும் கிடையாது.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலிய பெருநிலப் பரப்புக்கு கொண்டு வந்ததென்பது அரசின் ஒரு அவசர குடுக்கை தனத்தையே காட்டுகிறது. ஏனெனில் அங்குள்ள செர்க்கோ நிறுவனம் இந்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுக்க ஆயத்தமாக இருக்கவில்லை.

கேர்ட்டினில் உள்ள சேர்க்கோ முகாமையாளர் புதிய அகதிகளின் தேவைகளை பரிசீலிப்போம் என கூறியிருக்கின்றார்.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தேவையான உடைகள் இல்லாமல் ஒரு அரசாங்கம் இருக்க முடியாது.

அரசாங்கம் கேர்ட்டினில் உள்ள அகதிகளுக்கு தேவையான உடைகளை உடனடியாக வழங்க வேணடும். அவர்கள் வுறும் எனும் நகரத்துக்கு ஒரு வாகனத்தை எடுத்து சென்று 3 மணி நேரத்தில் தேவையான ஆடைகளை வாங்கி வர முடியும் என்று இயன் தெரிவித்தார்.

மேலும் அங்கு பொழுது போக்கு வசதிகளும் இல்லை. ஒரு தொலைக் காட்சி கூடவும் இல்லை. அமைச்சர் மொரிசன் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்.

இந்தியாவுடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் என்பது அவுஸ்திரேலிய அரசு சர்வதேச கடற் பரப்பில் நியூசிலாந்து நோக்கி சென்று கொண்டிருந்த படகை சட்டவிரோதமாக கைப்பற்றியதை மூடி மறைக்க குடிவரவு அமைச்சரால் போடப்பட்ட ஒரு மூடு திரை அன்றி வேறல்ல.

அவுஸ்திரேலிய அரசின் நடவடிக்கைகள் சட்ட பூர்வமானவையா என மேல் நீதிமன்றம் அனுமானித்து எடுக்கும் நடவடிக்கைகளை முந்திக் கொள்வதற்காக பிரதமர் டோணி அபேட்டும் குடிவரவு அமைச்சர் மொரிசனும் அவசரப்பட்டு விட்டார்கள் என இயன் கூறினார்.


இந்த அகதிகள் அவுஸ்திரேலியாவில் வைத்து அவுஸ்திரேலிய அரசினால் மட்டுமே கையாளப் படுவார்கள். இந்தியாவில் இருந்து ஒரு இந்திய அகதி கூட இந்த படகில் வரவில்லை.

புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உடனடியாக தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அவர்கள் அவர்களின் உறவினர்களுடன் உடனே தொடர்பு கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு.

அவர்களுக்கு உடனடியாக சட்ட ஆலோசனைகளும் சட்ட உதவிகளும் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் தங்களது பாதுகாப்பு விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஸ்கொட் மொரிசன் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து இலங்கை அகதிகளை மட்டும் குறி வைத்து செயற்படுவது மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது என தெரிவித்துள்ளார். (6)



பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தினால் குறிஞ்சிச்சாரல் கலை கலாசார கதம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-என்.குமார் ,மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனர்களின் தளமாகும் சீனக்குடா...!

சீனக்குடாவில், விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்கும் விவகாரத்தில், அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்கிறதா என்ற சந்தேகம் இப்போது வலுப்பெற்றிருக்கிறது.

சீனக்குடாவில் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பான விவகாரம், கடந்த வாரம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்திருந்தது.

திருகோணமலையில் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு சீனாவுக்கு அனுமதி அளிப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் அது 1987 இல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு எதிரானது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதைவிட, இலங்கை விமானப்படையிடம் உள்ள 34 சீன விமானங்களையும் பராமரிக்க ஆண்டுக்கு ஒரு மில்லியன் டொலரே செலவாகிறது என்றும் அதற்காக ஏன் 40 மில்லியன் டொலர் செலவில் பராமரிப்பு நிலையத்தை அமைக்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்திருந்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தக் காரியத்தையும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்காது என்று தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி சீனக்குடாவில்தான் இந்த விமானப் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட தகவலின்படி கட்டுநாயக்க, திருகோணமலை, மத்தள ஆகிய மூன்று விமான நிலையங்களில் ஏதாவது ஒன்றில் இந்த விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

ஆனால், சீனக்குடாவில்தான் அது அமைக்கப்படும் என்பது இன்னமும் உறுதியாகவில்லை. இலங்கை அரசாங்கம்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும் என்று பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.

மறுநாள், இந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அங்கு கருத்து வெளியிட்ட பிரிகேடியர் ருவான் வணிக சூரிய, திருகோணமலையில்தான், இந்த விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டதுடன், அந்தப் பராமரிப்பு நிலையத்தை இலங்கை விமானப்படையே நிர்வகிக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதாவது, சீன நிறுவனம் இந்த விமானப் பராமரிப்பு நிலையத்தை உருவாக்கினாலும் அதனை நிர்வகிக்கப்போவதும் அங்கு பணியாற்றப் போவதும் இலங்கை விமானப் படையினர்தான் என்று கூறி சமாளிக்க முற்பட்டார்.

அவர்களுக்கான பயிற்சிகளை அளிக்கப் போவது, சீன நிபுணர்கள்தான் என்பதையும் முதற்கட்டமாக அந்தப் பணியே இடம்பெறும் என்றும் அவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அந்தப் பயிற்சி அளித்தல் பணி எவ்வளவு காலத்துக்குத் தொடரும் என்பது குறித்து அவர் எந்த தகவலையும் வெளியிடவில்லை.

ஒரு பக்கத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இன்னமும் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்படவில்லை என்று கூறுகின்ற அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரோ, சீனக்குடாவில்தான் அது அமைக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இந்த இழுபறியைக்கொண்டே இந்த விவகாரத்தில் அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணான விடயங்களைக் கூறுகிறது என்பது உறுதியாகியுள்ளது. அதுபோலவே இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எதற்கும் இலங்கை இடமளிக்காது என்று அரசாங்கம் கூறியிருக்கிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும்கூட இந்தியாவுக்கு அச்சுறுத்தலானது அல்ல என்றுதான் அரசாங்கம் கூறி வருகிறது. ஆனால், சீனாவின் முத்துமாலை வியூகத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகமும் ஒன்றாகவே குறிப்பிடப்படுகிறது.

இதற்கிடையே சீனக்குடாவில் விமானப்பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு சீனாவுக்கு இடமளிக்கப்பட்டது குறித்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தம்மிடம் பிரச்சினை எழுப்பியதாக வெளியான செய்திகளை பீரிஸ் மறுத்திருக்கிறார்.

சாதாரணமாக, நட்பு ரீதியாகவே அதுபற்றி சுஸ்மா சுவராஜ் விளக்கம் கேட்டார் என்றும் அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறாயின் சீனக்குடாவில் விமானப்பராமரிப்பு நிலையத்தை சீனா அமைப்பதை இந்தியா தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாகப் பார்க்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

ஆனால், ஒருபோதும் அந்தக் கவலை இந்தியாவுக்கு ஏற்படாது என்று கூறமுடியாது.

ஏனென்றால் சீனக்குடாவிலுள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவே நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

சம்பூரில் இலங்கையுடன் கூட்டு முயற்சியாக அனல்மின் நிலையத்தை அமைக்கப் போகிறது.

இவ்வாறு இந்தியாவின் நலன்களைப் பேணுகின்ற ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் சீன பாதுகாப்பு நிலை ஒன்று அமைவதை இந்தியா ஒருபோதும் விரும்பாது.

ஆனால், இந்த விடயத்தில் இந்தியாவுக்கு சரியான தகவல்களை இலங்கை பரிமாறுகிறதா என்ற சந்தேகமும் உள்ளது.

ஏனென்றால், இம்மாத நடுப்பகுதியில் இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் அரூப் ராஹா, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவர் தனது பயணத்தின் கணிசமான நேரத்தை திருகோணமலையில் கழித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனக்குடாவில் உள்ள விமானப் படைப் பயிற்சி நிலையத்தில் அவர் முக்கியமான நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

இந்த விமானப்படைப் பயற்சி நிலையத்துக்கு அருகில்தான் விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைக்க சீனாவின் வான் பொறியியல் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்துக்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் அங்கு பணியாற்றவுள்ள சீனப் பொறியியலாளர்களுக்காக, மாபிள் பீச் பகுதியில் ஒரு தங்குமிடத் தொகுதியும் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது விமானப்படையின் விடுதி அமைந்துள்ள மாபிள் பீச் பகுதிக்கும் இந்திய விமானப்படைத் தளபதி சென்றிருந்தார்.

துறைமுகப் பகுதியை படகு மூலம் சென்றும் பார்வையிட்டிருந்தார். எனவே, சீனக்குடா விடயத்தில் இந்திய பாதுகாப்புத் தரப்பு மெத்தனமாக இருக்கிறது என்று கருதக்கூடாது.

ஆனால், இந்திய விமானப்படைத் தளபதி கொழும்புக்கு வருவதற்கு சிலநாட்கள் முன்னதாகவே இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கோலித குணதிலக சீனாவுக்குச் சென்று திரும்பியிருந்தார்.

எனினும் அவரது பயணம் தொடர்பாக தகவல்களை இந்திய விமானப் படைத் தளபதி கொழும்பில் இருந்து திரும்பும் வரை இலங்கை அரசாங்கமோ விமானப்படையோ வெளியிடவில்லை.

கிட்டத்தட்ட பத்து நாட்கள் கழித்தே அதுபற்றி அறிவிக்கப்பட்டது.

சீனாவில் பயணம் மேற்கொண்டிருந்த போது கடந்த 10 ஆம் திகதி சீன விமானப்படைத் தளபதி ஜெனரல் மா சியாவேதியனுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கோலித குணதிலக.

அவர்களின் பேச்சுக்களில் சீனக்குடா விவகாரம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஏனென்றால், 2011 ஆம் ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, சீன விமானப்படைத் தளபதியான ஜெனரல் மாசியாவோதியன் திருகோணமலைக்கும் சென்றிருந்தார்.

அவர் சீனக்குடாவின் அமைப்பை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னர்தான், அங்கு தளம் அமைக்க சீனா அடிபோட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, விமானப்படைத் தளபதி, எயர் மார்ஷல் கோலித குணதிலக தனது சீனப்பயணத்தின்போது சீனக்குடாவில் விமானப் பராமரிப்புத் தளத்தை நிறுவத் திட்டமிட்டுள்ள சீன வான்பொறியியல் ஏற்றுமதி இறக்குமதிக் கூட்டுத்தாபனத்துக்கும் சென்றிருந்தார் என்பதும் கவனிக் கத்தக்கது.

ஆக, சீனக்குடாவில் சீன நிறுவனத்துக்கு தளம் அமைக்க இணங்கப்பட்டுவிட்டது என்பது உறுதியாகிவிட்டபோதும் இந்த விவகாரம் பிரச்சினையாக்கப்படாமல் இருப்பதற்காக முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அரசாங்கம் வெளியிடுகிறது.



இலங்கை விமானப் படையிடம் மொத்தமாக உள்ள 160 விமானங்களில் சீனத் தயாரிப்பு விமானங்கள் வெறும் 34 மட்டுமே உள்ளன.

அதுவும் சீனத் தயாரிப்பு விமானங்களின் பராமரிப்புச் செலவினங்களை விட, அமெரிக்க ரஷ்யத் தயாரிப்பு விமானங்களின் பராமரிப்புக்கு விமானப் படை அதிகளவு பணத்தைச் செலவிடுகிறது.

ஏனென்றால், அவற்றைப் பராமரித்து திருத்தியமைக்கவோ, மீளப் புனரமைக்கவோ, அமெரிக்காவுக்கோ, ரஷ்யாவுக்கோதான் அனுப்ப வேண்டியுள்ளது.

ஆனால், சீன விமானங்களை பாகிஸ்தானில் வைத்தே புனரமைக்கும் வசதிகள் உள்ளன.

அதற்கு ஆகின்ற போக்குவரத்துச் செலவு ரஷ்யா, அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது மிக மிகக் குறைவே. இருந்தாலும் அரசாங்கம் சீனாவின் விமானங்களைப் பராமரிப்பதற்கான நிலையத்தை மட்டும் அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதும் அது குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிடுவதும் இந்த விவகாரத்தில் அரசாங்கத்தின் மீது சந்தேகம் கொள்ளவே வைக்கிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன் சாட்சியமளிப்பது தேசத்திற்கு செய்யும் துரோகமாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்





ஐ.நா. விசாரணை ஆணைக் குழுவிற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சாட்சியமளிப்பது தேசத்துரோக செயலாகும் என விசனம் தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் டாக்டர் வசந்த பண்டார, ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்க சொல்ஹெய்ம் முயற்சிப்பது அவ்வாணைக்குழுவிற்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் சதித்திட்டமாகும் என்றும் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை நியமித்த சர்வதேச விசாரணைக் குழுவை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தோடு அக்குழுவை நிராகரித்ததோடு இலங்கை பாராளுமன்றத்திலும் அதற்கெதிராக ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து வடமாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்றுள்ள விக்னேஸ்வரன் எவ்வாறு சர்வதேச விசாரணை குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க முடியும். அவ்வாறு சாட்சியமளிப்பது என்பது தேசத்துரோக செயலாகும்.

இதற்கெதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பது தொடர்பில் தெளிவில்லை. ஆனால் சர்வதேச விசாரணை குழுவில் முதலமைச்சர் சாட்சியமளிப்பதற்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி மெக்ஸ்வல் பரணகம ஆணைக்குழுவை உள்ளூரில் நியமித்தார். இக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக அண்மையில் ஜனாதிபதி மூவர் அடங்கிய வெளிநாட்டு நிபுணர்களை நியமித்தார்.

இதன்பின்னர் இந்த ஆணைக் குழுவிற்கு சாட்சியங்களை வழங்க தயான் ஜயதிலக்க, விக்டர் ஐவன், விக்னேஸ்வரன் மட்டுமல்ல இலங்கையை பிரிக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்த எரிக்சொல் ஹெய்மும் முண்டியடிக்கின்றனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு உள்ளூர் விசாரணைக்குழுவில் இயங்கும் போது ஆர்வம் காட்டாதவர்கள் இன்று வெளிநாட்டு நிபுணர்களை நியமித்ததும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஏன் விசேடமாக சொல்ஹெய்ம் சாட்சி வழங்குவதன் மூலம் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும். அதற்கே இந்த முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே இக்குழுவிற்கு வெளிநாட்டு நிபுணர்களை நியமித்தமை அரசாங்கம் செய்த மாபெரும் பிழையாகும் என்றார். (6)

# கண்டனம்

சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜெயசேகரவிற்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் இது குறித்து அரசாங்கத்தை உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பத்திரிகையாளர்களை குறிப்பாக தமிழ் பத்திரிகையாளர்களை துன்புறுத்துவதை கைவிடுமாறும் கோரியுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜெயசேகரவிற்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இலங்கை பத்திரிகையாளர்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்பின்மையை கருத்தில் கொள்ளும் போது இந்த அச்சுறுத்தல்களை அலட்சியம் செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# அரசாங்கத்தின் குற்றச்சாட்டை நிராகரித்தார் நவிப்பிள்ளை

(கொழும்பு)



முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இலங்கை மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான தமது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நிராகரித்துள்ளார்.

அல் ஜசீரா தொலைக்காட்சியில் நேற்று இடம்பெற்ற டோக் டு அல் ஜசீரா நிகழ்ச்சியின் போது நவநீதம்பிள்ளை தம் மீதான குற்றச்சாட்டை மறுத்தார். ஐக்கிய நாடுகள் சபையில் நவநீதம்பிள்ளையின் பயணம் என்ற தலைப்பில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

தாம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சந்தித்த சாட்சிகளின் தகவல்கள் அடிப்படையிலேயே தமது அறிக்கை தயாரிக்கப்பட்டதாக நவநீதம்பிள்ளை இதன்போது குறிப்பிட்டார். (6)

# அகப்பட்ட மீனவர்களை மீட்கக்கோரி பிரதமருக்கு ஜெயா மீண்டும் கடிதம்

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் மீண்டும் எழுதியுள்ளார். இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

தங்கள் தலைமையிலான மத்திய அரசு எடுத்த துரித முயற்சியால் சீரான இடைவெளியில் 225 தமிழக மீனவர்கள் படிப்படியாக இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டனர்.

இருப்பினும் அப்போது பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் 55 படகுகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

மேலும் கடந்த 22 ஆம் திகதியும் இலங்கை சிறையில் உள்ள 43 மீனவர்களையும் அவர்களது 9 படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்கக் கோரி தங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

இருப்பினும் அவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் இன்று நாகபட்டினத்தைச் சேர்ந்த 50 மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் அவர்களை சிறைபிடித்ததுடன் அவர்களது 5 இயந்திரப் படகு மற்றும் 2 நாட்டுப் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுபோன்று தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிக்கப்பட்டு வருவது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது.

எனவே தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இலங்கை சிறையில் உள்ள 93 மீனவர்களையும், 62 படகுகளையும் விடுவிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். (6)

# இன்று ஒரு தகவல்

## உயர்ந்த நோக்கம்

நண்பர் ஒருத்தர் நடந்து போய்க் கொண்டிருந்தார். நானும் அவருடன் போய்க் கொண்டிருந்தேன். அவருடைய நடை இருக்கே... நிமிர்ந்த நன்னடை! நேர் கொண்ட பார்வை! குதிரைபோல் போய்க் கொண்டிருந்தார்.

"எப்பவுமே நீங்கள் இப்படித்தானா?" என்றேன்.

"உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லக்கூடிய ஒரு மனிதன் பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்துக்காகவோ தான் போய்க் கொண்டிருக்கும் நோக்கத்தை மறந்து பின்னாலே தான் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க முற்பட்டால் அவருடைய முன்னேற்றம் தடைப்படும். அவனுடைய எண்ணம் ஈடேறாமல் போய்விடும்" என்று ஒரு விளக்கம் கொடுத்தார்.

"இது என்ன விளக்கம்?" என்றேன். "பகவத்கீதை விளக்கம்" என்றார். அத்துடன் விடவில்லை அதற்கான கதையையும் சொன்னார். நானும் கேட்டுக் கொண்டே அவரோடு நடந்து போனேன். அவர் சொன்ன கதை இதுதான். பாரத யுத்தம் முடிந்தவுடன் பலராலும் கிருஷ்ணனும் இந்த பூவுலகத்தை விட்டு பரலோகத்துக்கு போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

அர்ஜுனன் ஒருமாதிரியாகிவிட்டான். அவன் அதுவரைக்கும் கற்று வைத்திருந்த அஷ்திர சாஸ்திரங்களையெல்லாம் மறந்தே போய்விட்டான். வியாச பகவான் பார்த்தார். அர்ஜுனா! நீயும் உன்னுடைய சகோதரர்களும் இந்த மண்ணுக்கு வந்த நோக்கம் முடிந்துவிட்டது. அதனால் தான் நீ கற்ற வித்தையெல்லாம் மறந்துவிட்டாய். இனிமேல் இந்த உலகத்தில் உங்களுக்கு வேலையில்லை. நீங்கள் புறப்படலாம் என்றார்.

அவருடைய உபதேசப்படி பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் சொர்க்கத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். முறைப்படி இந்தப் புண்ணிய பூமியை வலம் வந்து மேருமலைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கேயிருந்த மணல் வெளிக்கு வந்து சேர்ந்ததும்... பாஞ்சாலி முதலில் மாண்டு மண்ணில் விழுந்தாள்.

"திரௌபதி மரணமடைந்த காரணம் என்ன?" என்று பீமன் தருமரிடம் கேட்டான். தருமர் பின்புறமும் திரும்பாமலேயே பதில் சொன்னார். "நம் ஐந்து பேரில் அர்ஜுனன் மீது மட்டும் அவள் அலாதியான அன்பு வைத்திருந்தாள். அவளுடைய பாரபட்சம் அவளைக் கொன்றுவிட்டது" என்று சொல்லிக் கொண்டே தான் போகும் பாதையில் முன்னேறிக் கொண்டே இருந்தார்.

கொஞ்ச நேரத்தில் சகாதேவன் மடிந்து விழுந்தான். "இதற்கு என்ன காரணம்?" என்று பீமன் கேட்டான். "சாஸ்திர ஞானத்தில் எனக்கு நிகர் யாரும் இல்லை. கல்விச் செருக்கினால் அவன் இறந்து போனான்." என்று விளக்கம் கொடுத்தார் தருமர்.

பின்னால் திரும்பிப் பார்க்காமல் தன்னுடைய வழியிலேயே அவர் போய்க்கொண்டிருந்தார்.

அடுத்த படியாக நகுலன் விழுந்தான். "அவனுக்குத் தான் மிகவும் அழகானவன் என்று எண்ணம் உண்டு. தனது மேனியழகைப் பற்றிய அந்தத் தற்பெருமைதான் அவனை வீழ்த்தி விட்டது" என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் தருமர். தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அர்ஜுனன் அடிபட்ட மான் போல மாண்டு போனான்.

இதையும் திரும்பிப் பார்க்காமல் தன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பீமனிடம் அதற்கான காரணத்தைச் சொன்னார் தருமர். நடந்து முடிந்த பாரதப் போரில் சுத்த வீரர்களுடைய கடமையை இவன் மறந்துவிட்டான். தான் ஒருத்தனாகவே எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்று நினைத்தான். அந்த வீறாப்பு அவனை அழித்து விட்டது" என்றார்.

சிறிது தூரத்தில் பீமனும் கீழே விழ ஆரம்பித்தான். "அண்ணலே எனக்கும் அழிவு காலம் ஆரம்பமாகிவிட்டது... என்னுடைய சாவுக்கு என்ன காரணம்?" என்று மண்ணில் விழுந்து உருண்டு கொண்டே கேட்டான்.

"உன்னுடைய உடல் வலிமையைப் பற்றி உன் உள்ளத்தில் கொண்ட எண்ணம் உன்னுடைய சாவுக்கு காரணம்" என்று சொல்லிவிட்டு... திரும்பிப் பார்க்காமல் தனியாக அவர் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். அங்கே தருமரை எதிர் கொண்டு அழைக்க இந்திரன் தனது விமானத்துடன் காத்துக் கொண்டிருக்கிறான். இந்திரன் தருமரிடம் கேட்டான்.

மடிந்த உன்னுடைய மனைவி மாண்டு போன உன் சகோதரர்கள் இவர்கள் எல்லாம் மண்ணில் விழுந்த போது நீ திரும்பிக் கூடப் பார்க்காமல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்ததற்கு என்ன காரணம்" என்று கேட்டான். அதற்கு தருமர் அமைதியாக பதில் சொன்னார்.

உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லும் ஒரு மனிதன் பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்துக்காகவோ தான் செல்லும் நோக்கத்தை மறந்து பின்னால் தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க முற்பட்டால் அவனுடைய முன்னேற்றம் தடைப்படும். அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும். இதுதான் தருமரின் பதில்.

சிந்திக்க வேண்டிய ஒரு கருத்துத்தான் இது. இந்தக் காலத்தில் நம்ம ஆளுக்கு யாராவது இப்படி பின்னாடி வருபவர்களைத் திரும்பிப் பார்க்காமல் நேராக நடந்து போய்க் கொண்டிருந்தால்... அவனுக்குப் பின்னாடி அவனுக்குக் கடன் கொடுத்தவன் வந்து கொண்டிருக்கிறான். என்று அர்த்தம். ஒருநாள் எனக்கு முன்னால் என் சிநேகிதன் ஒருத்தன் திரும்பிப் பார்க்காமல் விறைப்பாக போய்க் கொண்டிருந்தான்.

நான் ஓடிப்போய் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு "ஏண்டா இப்படிப் பயப்படுகிறாய்? என்னிடம் நீ என்ன கடனா வாங்கியிருக்கிறாய்?" என்று கேட்டேன். இப்பொழுதும் அவன் முகத்தைத் திருப்பாமலே பதில் சொன்னான். "உன்னிடம் நான் ஏதும் கடன் வாங்கவில்லை என்பது சரி... ஆனால் என்னிடம் கடன் வாங்கிய ஒருத்தன் இப்பொழுது என் முன்னால் போய்க் கொண்டிருக்கிறான். அவன் என் கண்ணிலிருந்து தப்பிப் போய்விடக் கூடாதென்பதற்காகத் தான் நான் கழுத்தைத் திருப்பாமால் முன்னேறிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு முன்னால் போற ஆசாமியைக் குறிபார்த்து நடந்து போய்க் கொண்டிருந்தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முதலமைச்சரிடம் குறைகளை சுட்டிக்காட்டிய துணுக்காய் மக்கள்

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறியுள்ள மூவாயிரத்து 600 குடும்பங்களில் ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு மீள்குடியேறி ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதி களான வீடு, குடிநீர், மலசலகூடம், மருத்துவம் உட்பட வாழ்வாதார உதவிகள் இன்றி துன்பப்படுவதாக அப்பகுதி பொது மக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் தம்மை சந்தித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடமும் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதி நிதிகளிடமும் முறையிட்டுள்ளனர்.

அண்மையில்துணுக்காய்மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச சபைகளில் வசிக்கும் பொது மக்களை வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் சந்தித்த போது இந் நிலைமைகளை பொது மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் எடுத்துக் கூறியுள்ளனர்.

சுத்தமான குடிநீர் கிணறுகள் இன்றி ஆயிரத்து 107 குடும்பங்களும் தனி அல்லது பொதுவான மலசல கூடங்கள் இன்றி ஆயிரத்து 96 குடும்பங்களும் காணப்படுகின்றன.

இதனைவிட வீட்டுத்திட்டத்தை பொறுத்தவரை 18 வயதிற்கும் 61 வயதிற்கும் இடைப்பட்ட எந்தவொரு புள்ளித்திட்டத்திற்கும் உள்வாங்கப்படாத பல அங்கத்தவர்கள் கொண்ட 630 குடும்பங்களும் போரின் போது உறவுகளைஇழந்தவர்களின்உள்ளடங்கலான பொதுஅங்கத்தவர்களை கொண்ட 512 குடும்பங்களும் வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

மருத்துவ வசதிகளை பொறுத்த வரையில் பிரதான வைத்தியசாலையான மல்லாவி வைத்தியசாலையில் குறைந்தளவு வைத்தியர்களே கடமையாற்றுகின்றனர்.

அத்துடன் துணுக்காய், ஐயங்கன் குளம் ஆகிய கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இன்றி இயங்குவதால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றன.

மேலும் மழை வீழ்ச்சி இன்மையால் பிரதான குளமாகிய வவுனிக் குளம் உட்பட ஏனைய சிறுகுளங்கள் வரண்டு போய் உள்ளதால் இங்குள்ள பல இளைஞர் யுவதிகள் உள்ளடங்கலான மக்கள் தொழில் வாய்ப்பின்றி வறுமையுடன் போராடி வருகின்றனர்.

பிரதேச சபையின் செயற்பாடுகளினால் மக்கள் கூடும் பொது இடங்களில் இரவு நேர மின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் பொது மக்கள் மற்றும் மாணவர்கள், பயணிகள் உட்பட பலரும் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

கிராமங்களுக்கு செல்கின்ற உட்புற வீதிகள் நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாது இருப்பதால் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதேவேளை பார்திநகர் மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையை அகற்ற வேண்டுமென பல தரப்பட்ட குறைபாடுகள் பொதுமக்களால் முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

இதனை செவிமடுத்த முதலமைச்சர் மிக விரைவில் இக்குறைபாடுகள் நீக்கப்படும் என பொதுமக்கள் மத்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். (6-15)



யு.என்.அனுசரணையுடன் கொரிய நாட்டின் கொய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட சிவநகர் அ.த.க. பாடசாலைக்கட்டடம் கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்த வைக்கப்பட்ட போது...

(படங்கள்:–சிவநகர் செய்தியாளர்)

## காடுகள், பற்றைகளுக்கு தீ வைப்பதை நிறுத்துங்கள்- மாங்குளம் பொலிஸார்

தற்போது நிலவும் வரட்சி காரணமாக பற்றைகள் மற்றும் புற்தரைகளுக்கு வீடுகளிலோ அல்லது பொது இடங்களிலோ தீ வைப்பதை தவிர்த்து கொள்ளுமாறு மாங்குள பிரதேச பொலிஸாரும் இப் பிரதேச பொது அமைப்புகளின்பிரதிநிதிகளும் இணைந்து பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது வன்னிப் பிரதேசங்களில் நிலவும் கடும் வரட்சி காரணமாக பயன்தரு பயிர் கொடிகள் உட்பட பயன்தரு மரங்கள் வாடிப் போயுள்ள நிலையில் சில விசமிகள் மக்கள் குடியிருப்பு பகுதியிலும் ஏ–9 வீதியை அண்டிய பகுதிகளில் உள்ள பற்றைகளுக்கும் புற்றரைகளுக்கும் தீ வைப்பதால் தீ அனர்த்தம் ஏற்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

அண்மையில் சில விசமிகளால் மாங்குளத்திலும் பனிச்சன் குளம் அண்டிய ஏ–9 வீதியின் அருகாமையிலுள்ள பற்றைகளுக்கு தீ வைப்பதால் ஏ–9 வீதியில் தரைப்பகுதியில் பறிக்கப்பட்டிருந்த புற்கள் எரிந்து நாசமாகியதுடன் பெரும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் ஏற்பட்டது.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் இராணுவ வீரர்களும் எடுத்த துரித முயற்சியின் காரணமாக காட்டுத்தீ பரவும் அபாயம் தடுக்கப்பட்டது.

எனவே, காடுகளுக்கும் பொது இடங்களிலுள்ள புற்றரைகளுக்கும் தீ வைக்கும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (6-15)

## பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலைக்கு நாளைய தினம் அடிக்கல் நாட்டு விழா

(கண்டாவளை)

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலை க்கான அடிக்கல் நாட்டு விழா நாளை முதலாம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு நாகேந்திரபுரம் புளியம்பொக்கணையில் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் கு.அருமைராசா தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளி/ மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் மற்றும் யு.என். சி.ஆர். கிளிநொச்சி மாவட்ட பிரதிநி எம்.மரீன்டின் கைடோம்கை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் ரவீந்திரன், கிளிநொச்சி கூட்டுறவு திணைக்கள தலைமைக்காரியாலய கூட்டுறவு பரிசோதகர் சிறிஸ்கந்தராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்ட சேவா லங்கா நிறுவன இணைப்பாளர் ஜெயதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-263)

## பாடசாலையின் பெயர் மாற்றம்!

பாடசாலையின் பெயர் மாற்றம் குறித்து தாம் எவ்விதமான கோரிக்கையையும் விடவில்லை என சுட்டிக் காட்டியுள்ள கிளி/விவேகாணந்தா வித்தியாலய அபிவிருத்திப் சங்கத்தினர் அது குறித்து தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தமிழ்ச்சோலையாக மாற்றித் தாருங்கள், கல்வி அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை என்ற தலைப் பில் நேற்றைய தினம் வெளியான வலம்புரிச் செய்தி குறித்து அப்பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ள விளக்க குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்ச்சோலையாக மாற்றித் தாருங்கள். கல்வி அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக கிருஸ்ணபுரம் பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றி கடந்த 25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் பாடசாலை அதிபரும் ஆசிரியரும் பெற்றோர் சிலரும் மட்டும் ஆரம்பம் முதல் முடிவுரை கலந்து கொண்டிருந்தோம்.

எங்கள் எவராலும் அவ்வாறு பெயர் மாற்றித்தருமாறு எவ்வித கோரிக் கையும் விடப்படவில்லை. கிளி/விவேகானந்த வித்தியாலயம் அம்பாள் குளம் கிராமத்திலே இயங்கும் புதிய பாடசாலையாகும். தமிழ்ச்சோலை வித்தியாலயம் இருந்த இடத்திலே தற்போது கிளி/அன்னைசாரதா வித்தியாலயம் என்ற ஆரம்ப பாடசாலையே இயங்கி வருகின்றது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட கிளி/அன்னைசாரதா வித்தியாலய அதிபரே தமது பாடசாலையின் பெயரை தமிழ்ச்சோலை வித்தியாலயம் என மாற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தார் என அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (6)




## நிதி வழங்கல்

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் இயங்கும் இந்து சிறுவர் மற்றும் முதியோர் ப்ராமரிப்பு இல்லங்களுக்கு இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தினால் 10 இலட்சம் ரூபா நிதி பங்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வேப்பம் குளம் இந்து அன்பக சிறுவர் இல்லத்திற்கு ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாவும் வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லத்திற்கு 4 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றும் முருகனூர் சிவன் முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கு 3 இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் 10 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்நிதியை சிறுவர் இல்லம் மற்றும் முதியோர் இல்ல பொறுப்பாளர்களிடம் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா வழங்கி சிறப்பித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-15)

## வவுனியாவில் காணாமற்போன சிறுவன் யாழில் கண்டுபிடிப்பு

(குருமன்காடு)

வவுனியா பேருந்து நிலையத்தில் காணாமற் போன சிறுவன் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இளைஞன ஒருவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

வவுனியா காரிக்குளத்தைச் சேர்ந்த 8 வயதான பெர்ணான்டோ சாரங்கன் என்ற சிறுவனே காணாமற் போயிருந்த நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

திருகோணமலையிலுள்ள உறவினர் வீடொன்றிற்குச் சென்று திரும்பி வரும்போது நேற்று முன் தினம் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து சிறுவன் காணாமற போனதாக உறவினர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இளைஞன் ஒருவரால் குறித்த சிறுவன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் சிறுவனின் பெற்றோரை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு தெரிவித்துள்ளனர். (6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சம் புகும் போராட்டம் விரைவில்; தமிழக மீனவர்கள் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

மாவட்ட ஆட்சியரின் உறுதியினை ஏற்று மீனவர்கள் படகுகளின் உரிமத்தை ஒப்படைக்கும் போராட்டத்தை கைவிட்டனர். அதேவேளையில் மத்திய அரசுக்கு எதிராக இலங்கையில் தஞ்சம் புகும் போராட்டத்தை நடத்துவோம் என மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து செல்வது வழக்கமாக உள்ளது.

கடந்த இரு மாத காலத்தில் 258 மீனவர்கள், 57 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்து செல்லப்பட்டனர்.

இதில் 215 மீனவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் 43 மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ளதுடன், இவர்களது 55 படகுகளும் இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், 55 படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேலை நிறுத்த போராட்டத்தை தொடர்ந்து மீனவர்கள் தங்கள் படகுகளின் உரிமங்களை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைப்பது மற்றும் மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசை கண்டித்து ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி அனைத்து மீனவர்களும் படகு களில் வெள்ளைக் கொடி கட்டி இலங்கையில் தஞ்சம் புகும் போராட்டத்தை நடத்த போவதாக அறிவித்திருந்தனர்.

இதன்படி கடந்த திங்கட்கிழமை காலை இராமநாதபுரத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து தங்களது படகுகளின் உரிமங்களை ஒப்படைக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

ஊர்வலமாக சென்ற மீனவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவு வாயிலில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். மேலும் அதிகாரிகளிடம் கோரிக்கையினை சொல்லி செல்லுமாறு மீனவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இதனை ஏற்றுக் கொள்ளாத மீனவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பிரதான வாயில் முன் அமர்ந்து கோஷமிட்டனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரை சந்திக்க மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மீனவர்கள் தங்களது படகுகளின் உரிமங்களுடன் மாவட்ட ஆட்சியர் நந்தகுமாரை சந்தித்து தங்கள் கோரிக்கைகள் குறித்து பேசினர்.

மீனவர்களின் கோரிக்கைக்கு பதிலளித்த மாவட்ட ஆட்சியர் நந்தகுமார், மீனவர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து தமிழக அரசு அறிந்துள்ளது. இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க தமிழக முதல்வர் நேரடியாகவும், அலுவலக ரீதியாகவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதன்மூலம் படகுகளும்மீனவர்களும், விரைவில் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே மீனவர்கள் தங்கள் போராட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.


மேலும் இலங்கை கடற்படையினரால் படகுகளை இழந்த மீனவர்களுக்கு அரசின் உதவிகளை பெற்றுத் தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே தமிழக முதல்வரின் மேல் நம்பிக்கை வைத்து மீனவர்கள் தங்கள் போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து மீனவர்கள், தங்கள் படகுகளின் உரிமங்களை ஒப்படைக்கும் போராட்டத்தை கைவிட்டனர்.

இதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய மீனவர் சங்க தலைவர் என்.ஜே.போஸ் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் திருப்திகரமாக உள்ளது. எனவே எங்களின் முதற்கட்ட போராட்டமான படகுகளின் உரிமங்களை ஒப்படைக்கும் போராட்டத்தை கைவிடுகிறோம்.

ஆனால் மத்திய அரசின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. எனவே எங்களின் வேலை நிறுத்த போராட்டம் தொடர்ந்து நடைபெறும். அதேபோல் எங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி நடக்க இருக்கும் இலங்கையில் தஞ்சம் அடையும் போராட்டத்தையும் நடத்துவோம் என்றார்.

முன்னதாக நடந்த ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலத்தில் மீனவர் சங்க தலைவர்கள், என்.தேவதாஸ், சேசு, எமரிட், சகாயம், மீனவர் மகளிர் அமைப்பின் நிர்வாகிகள் இருதயமேரி, மோட்சராணி, விவேகானந்தா குடில் நிர்வாகி சுவாமி பிரணவானந்தா உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள் பங்கேற்றனர். (6)



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் இவ்வாண்டிற்குரிய நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்ற போது...
(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# சுஸ்மா சுவராஜ் விரைவில் இலங்கைக்கு விஜயம்



இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மியான்மாருக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. இதேவேளை விரைவில் இலங்கைக்கும் அவர் வரவுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்று இரண்டு மாதங்களில், இவர் மேற்கொள்ளவுள்ள நான்காவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் அயல் நாடுகளில் ஒன்றான நேபாளத்துக்கு விஜயம் செய்து புதுடில்லி திரும்பியுள்ள நிலையில், இந்தப் பயணம் தொடர்பான செய்தி வெளியாகியுள்ளது.

பங்களாதேஷ்க்கு முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருநத இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து பின்னர் பூட்டானுக்கு சென்றிருந்தார்.

இந்தியாவின் அயல் நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்தின் முக்கியமான நகர்வாக இந்தப் பயணங்கள் கருதப்படுகின்றன.

மியான்மாரில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் ஆகியோரை கொழும்பு வருமாறு இலங்கை இரண்டு தடவைகள் அழைப்பு விடுத்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த அழைப்பை இந்தியாவின் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், அவர்களின் பயணத்துக்கான திகதி இன்னமும் குறிக்கப்படவில்லை. (6)

# பிரிவுத்துயர் பகிர்வு



## திருமதி நல்லதம்பி சிவச்செல்வம்

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொம்மாந்தறையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவச்செல்வம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி தர்மலிங்கம் வள்ளியம்மை



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், இல. 32, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் வள்ளியம்மை கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி வேலாயுதபிள்ளை நாகேஸ்வரி



வேலணை சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை நாகேஸ்வரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி அழகக்கோன் மேரி பியற்றிஸ்



இளவாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அழகக்கோன் மேரி பியற்றிஸ் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Our Lady Of The Visitation,Greenford Road,Greenford UB6 9AN,UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

## வேலாயுதப்பிள்ளை நாதன்



சுண்டுக்குளி பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதப்பிள்ளை நாதன் கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு 3542 Rosemont Blvd., Montreal, QC, Canada, H1X 1K8, Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை மாறும் காஸா போர் நிலைமைகள்



ஒருசில மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை மாற்றம் நிகழும் காஸாப் போர் நிலைமைகள், கடந்த திங்கட்கிழமை இரவிலிருந்து மிகவும் கொடூரம் அடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கமாஸ் தீவிரவாத இயக்கத்தின் இராணுவ பலத்தை அடியோடு அழித்து, இஸ்ரேல் நோக்கிய சட்டவிரோத சுரங்கப் பாதைகளை முழுமையாகச் சிதைக்கும் வரையிலும், போர் தொடருமென இஸ்ரேல பிரதமர் பெஞ்சமின் நெதன்ஜாகூ உறுதியாகக் கூறியமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு காஸாப் பகுதியில் 150 இலக்குகள், இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில் சிதைக்கப்பட்டுள்ளது. அதில் மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றும், கமாஸ் தீவிரவாத இயக்கத்தின் தொலைக்காட்சி நிலையமும், அரச கட்டடங்கள் சிலவும் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் அரசும், கமாஸ் தீவிரவாத இயக்கமும் இந்நிலைக்கு ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கமாஸ் இயக்கத்தின் பீரங்கித் தாக்குதலில், இஸ்ரேலியப் பொதுமக்கள் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுரங்கப் பாதைகளூடாக, கமாஸ் போராளிகள் இஸ்ரேலிற்குள் நுழைந்த போது, இஸ்ரேல் இராணுவத்தினரால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் இராணுவம், வைத்தியசாலை ஒன்றையும் அகதிகள் முகாம் ஒன்றையும் தாக்கியதாகக் கமாஸ் இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானமானது, இஸ்ரேல் பொது மக்களைக் கொலை செய்யும் தீவிரவாத இயக்கத்தின் தேவைகளை அனுசரிப்பதாக அமைந்துள்ளதெனவும், அது இஸ்ரேல் மக்களின் பாதுகாப்பை சிந்தையில் கொள்ளாதது தவறெனவும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனிற்குத் தொலைபேசி மூலம், நெதன் ஜாகூ தெரிவித்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.

கமாஸ் இயக்கத்தின் ஏவுகணைத் தாக்குதலிற்கும், சுரங்க வழித் தாக்குதலுக்குமிடையில் இஸ்ரேல் மக்கள் பயந்து வாழ்வதை அனுமதிக்க முடியாதெனவும், கமாஸ் இயக்கத்தின் இராணுவ பலமும், சுரங்கப் பாதைகளும் முற்றாக சீரழிக்கப்படும் வரை, போர் நிறுத்தம் ஏற்புடையதாகாது எனவும், நெதன் ஜாகூ, பான் கீ மூனிடம் உறுதியாகக் கூறியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

காஸாப் பகுதியில் மக்களின் இறப்பு வீதமும், வீடுகளை இழந்து அலையும் மக்கள் தொகையும் அதிகரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. நோன்பு முடிக்கும் நாட்கள் நின்மதியற்ற பயங்கர அனுபவத்தை காஸா மக்களுக்குப் பகர்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

# நரேந்திர மோடி சர்வாதிகாரி; முதலமைச்சர் குற்றச்சாட்டு

பிரதமர் நரேந்திர மோடி சர்வாதிகாரியாக நடந்துகொள்வதாக மகாராஷ்டிர முதலமைச்சர் பிருத்விராஜ் சவாண் குற்றம் சாட்டியுள்ளார்.

மும்பையில் மகாராஷ்டிர முதலமைச்சர் பிருத்விராஜ் சவாண் பிரதமர் மோடி பற்றி கூறுகையில், மோடி அரசால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர், குஜராத்தில் மோடி சர்வாதிகார ஆட்சி நடத்தினார், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகார ஆட்சிதான் அமையும் என்று நாங்கள் அச்சப்பட்டவாறே நடந்துள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்களுக்கு மரியாதையும், பொறுப்புணர்வும் இருந்தது. ஆனால் அது தற்போது இல்லை.

தற்போது ஆட்சியில் மத்திய அமைச்சர்கள் நடத்தப்படும் விதம் சரியில்லை, அவர்கள் சுந்திரமாக செயற்பட அனுமதிப்பதில்லை.

தேர்தலின்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மீது மக்களுக்கு இருந்த கோபத்தை மோடி தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மோடி அரசு' என்ற கனவை மட்டுமே விற்பனை செய்தார்.

மேலும், சந்தையில் பொருள் விற்பனை செய்வது போல் தனனை சிறப்பாக சந்தைப்படுத்தியும் பெருமளவு விளம்பரங்கள் செய்தும் மோடி வெற்றி பெற்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (6)

# குடிபோதையில் தள்ளாடியவரை உயிர் காத்த கைத்தொலைபேசி

சீனாவில் குடிகார நபர் ஒருவரின் உயிரை அவரது கைபேசி துப்பாக்கி குண்டில் இருந்து காப்பாற்றியுள்ளது.

சீனாவின் வடக்கு பகுதியில் உள்ள சின்சூ நகரை சேர்ந்த ஹன்பெங் என்ற நபர் மது பழக்கத்திற்கு அடிமையானவர்.

இவர் மதுக்கடையில் குடித்துக் கொண்டிருந்த போது அங்கிருந்த நபர் ஒருவருடன் தகராறு செய்துள்ளார்.இதனால் ஆத்திரம் அடைந்த அந்த நபர், தன் துப்பாக்கியை எடுத்து ஹன்பெங்கை சுட்டுள்ளார்.அப்போது அதில் ஒரு குண்டு அவரது இதய பகுதியில் பாய்ந்துள்ளது.

ஆனால் அவர் சட்டைப்பையில் வைத்திருந்த கைபேசியில் குண்டு தாக்கியதால், லேசான காயத்துடன் தப்பித்து அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார்.

இந்நிலையில் மகிழ்ச்சி அடைந்த அவர், தன் உயிரை காப்பாற்றிய கைபேசிக்கு நன்றி தெரிவித்துள்ளார். (6)

# மனைவியை கடித்த பாம்புடன் வைத்தியசாலை சென்ற கணவன்

(சென்னை)

சேலம் மாவட்டத்தில் விவசாயி ஒருவர் மனைவியை கடித்த பாம்பை கையில் எடுத்துக்கொண்டு வைத்தியசாலை சென்றுள்ளார்.

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், பாப்பாபட்டியை சேர்ந்தவர் தென்குலமன்னன் (வயது 30), இவருடைய மனைவி சந்திரகலா (வயது 27) நிலத்தில் விவசாயம் செய்து வரும் சந்திரகலா தன்னுடைய வீட்டின் அருகே கிடந்த தென்னை மட்டை, தென்னை நார் போன்ற குப்பைகளை கூட்டிக் கொண்டிருந்தார்.


அப்போது குப்பைக்குள் மறைந்திருந்த ஒரு பாம்பு சந்திரகலாவின் கையில் கடித்தது. பாம்பு கடித்தது பற்றி உடனடியாக தனது கணவரிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, தென்னை மட்டைகளுக்குள் இருந்த அந்த பாம்பை பிடித்த தென்குலமன்னன் அதை ஒரு சாக்குப்பையில் போட்டு கட்டி எடுத்துக்கொண்டு மனைவியுடன் சேலம் அரசுவைத்தியசாலை புற நோயாளிகள் பிரிவிற்கு சென்றுள்ளார்.

அங்கு பணியில் இருந்த வைத்தியர்களிடம் நடந்த சம்பவம் குறித்து எடுத்து கூறிய அவர், தனது மனைவியை கடித்த பாம்பையும் கையோடு பிடித்து எடுத்து வந்துள்ள விபரத்தையும் கூறியுள்ளார்.

கடித்த பாம்பு கறுப்பு நிறமாக இருந்தது. அது எந்த ரகத்தை சேர்ந்தது என கண்டுபிடிக்க முடியவில்லை. கடித்தது எந்த வகை பாம்பு என்பது தெரிந்தால் அதை வைத்து சிகிச்சை அளிக்க வைத்தியர்களால் முடியும் என்பதால் அந்த பாம்பை எடுத்துக்கொண்டு வந்து விட்டேன் என்று கூறியுள்ளார். (6)

# பெரும் தீயால் பரபரப்பு



(திரிபோலி)

லிபியா நாட்டின் தலைநகர் திரிபோலியிற்கு மிக அண்மித்த பகுதியில் அமைந்துள்ள பிரமாண்டமான பெற்றோல் பண்டகசாலை ஒன்று தாக்கப்பட்டதில், பெருந்தீ அந் நகரைப் பீதியில் ஆழ்த்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் ஏவுகணைத் தாக்குதலிற்கு உள்ளான 6 மில்லியன் லீற்றர் கொள்ளளவு கொண்ட இரு கலங்கள், கட்டுப்படுத்த இயலாத வகையில் எரிந்து கொண்டு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடமையில் ஈடுபட்டிருந்த தீயணைப்புப் படையினர், எச்செயலும் பயனளிக்காத நிலையில் அவ்விடத்தை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று கிலோ மீற்றர் சுற்றளவில் வாழ்பவர்களை, வீடுகளை விட்டு உடனே வெளியேறும்படி அரசாங்கம் நிபந்தனை விதித்துள்ளது. உடனடியாகத் தீ அணைக்கப்படாது போனால், மக்களிற்கும் சுற்றுப்புற சூழலிற்கும் பெரும் ஆபத்தை அது தரக் கூடுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரு வார காலமாக திரிபோலி விமான நிலையத்தைத் தம்வசம் கொண்டு வரும் முயற்சியில், தீவரவாதிகள் அங்கு போராடி வருவது குறிப்பிடப்பட்டுள்ளது. இப் போரில் கடந்த சனிக்கிழமை 90 பேர் கொல்லப்பட்டு, 400 பேர் மட்டில் காயமுற்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இப் போர் இடம்பெறும் பகுதியை அண்மித்த வீதி ஓரங்களில். தாக்கப்பட்ட எரிபொருட் கலங்கள் பல உள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. பல நாடுகள் தீயணைக்கும் விமானங்களை உடனடியாக அனுப்பிவைக்க முன்வந்துள்ளன. அத்தோடு, ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் தங்கள் பிரஜைகளை உடனடியாக அங்கிருந்து வெளியேறும்படி கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முகமட் அல் கடாபி கவிழ்க்கப்பட்ட 2011 களிலிருந்து, லிபியா அமைதியிழந்து காணப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது. பல மாறுபட்ட குழுக்கள், பெரு நகரங்களையும், எண்ணெய் உற்பத்தி காணப்படும் இடங்களையும் கைப்பற்றப் போராடி வருவது சுட்டிக்காட்டபட்டுள்ளது. தற்போது இடம் பெறும் லிபியப் போரால் ஆயிரக் கணக்கான மக்கள் துனேஸியாவை நாடி இடம்பெயர்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# உலக நாடுகளை உளவு பார்க்கும் அமெரிக்கா

சீனா மற்றும் பிற நாடுகளின் செயற்கைக்கோள்களை உளவு பார்க்க அமெரிக்கா செயற்கை கோளை விண்ணில்செலுத்தியுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப்கேனரவல் விண்வெளி மையத்தில் இருந்து 'டெல்டா 4' என்னும் ஒரு ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

63 மீற்றர் உயரம் கொண்ட இந்த ரொக்கெட்டை யுனைட்டட் ஏலியன்ஸ் என்னும் அமெரிக்க நிறுவனம் லாக்கீட் அண்ட் போயிங் என்ற நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து இதனைத் தயாரித்து இருந்தது. இதில் சக்தி வாய்ந்த ஒரு ஜோடி செயற்கை கோள்களும் பொருத்தப்பட்டு இருந்தன.

இந்த செயற்கைகோளை மற்ற நாடுகள் விண்ணில் செலுத்தும் விண்வெளிக்கலங்களையும், அவற்றின் செயற்பாடுகளையும் துல்லியமாக உளவு பார்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சீனா உள்ளிட்ட பல நாடுகள் தங்களின் நாட்டின் பல்துறை வளர்ச்சியாக செயற்கைகோளை விண்ணில் ஏவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# 9 அடி உயரத்திலிருந்து விழுந்த குழந்தை உயிர் தப்பிய அதிசயம்



பிரித்தானியாவில் 9 அடி உயரத்தில் இருந்து விழுந்த குழந்தை, உயிர் பிழைத்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரித்தானியாவின் சவுத் டெனி ஸைட் நகரை சேர்ந்த முர்பி என்ற ஒரு வயது குழந்தை இவ்வாறு அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

குழந்தை படிக்கட்டின் கம்பியின் சிறு வழியில் இருந்து கீழே தடுமாறி விழுந்துள்ளது.

குழந்தை கீழே விழுந்ததும் முர்பியின் பெற்றோர்கள் அவசர ஊர்தியின் மூலம் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

குழந்தைக்கு இடது கண்ணில் மட்டும் பலமாக அடிபட்டுள்ளது.

இதுகுறித்து முர்பியின் பெற்றோர் கூறுகையில், குழந்தை அலறிய சத்தம் கேட்டவுடன் எங்களுக்கு உயிரே போய்விட்டது , தற்போது முர்பி குணமடைந்து [illegible] மனதுக்கு ஆறுதலாக உள்ளது என்றும் முர்பி உயரமான இடத்திலிருந்து விழுந்து உயிர் தப்பியது ஒரு பெரும் அதிர்ஷ்டம் தான் எனவும் கூறியுள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மரங்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும். நல்ல மக்கள் நல்லதையே செய்வார்கள்.
– யேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சர்வதேச நிபுணர் குழுவால் அரசாங்கத்திற்கே பாதகமாம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தக்குற்றங்கள் இலங்கையில் இடம பெற்றிருக்குமாயின் தமிழ் மக்கள் பாதிக் கப்பட்டுள்ளமை விசாரணைகளில் நிரூ பணமாகுமெனின் அதற்கான குற்றவாளி கள் தண்டிக்கப்பட வேண்டும்.

எனினும் விடுதலைப் புலிகளினால் இடம்பெற்ற மோசமான குற்றங்களுக் காக யாரை தண்டிப்பது? என கேள்வி எழுப்பும் ஜாதிக ஹெல உறுமய கட்சி இலங்கை விடயத்தில் சர்வதேச நிபுணர குழுக்களை அமைப்பது அரசாங்கத் திற்கே பாதிப்பாக அமையும் எனவும் குறிப பிட்டது.

காணாமல் போனோரை கண்டறி யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க சர்வதேச நிபு ணர் குழு நியமித்துள்ளமை தொடர்பில் வினவிய போதே அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொது செயலா ளருமான பாட்டாளி சம்பிக்க ரண வக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

விடுதலைப் புலிகளுடனான யுத்தத் தில் அரசாங்கம் பொதுமக்களை பாதிக் கும் வகையில் ஏதேனும் தவறிழைத் திருக்குமாயின் அல்லது இராணுவத்தி னால் ஏதேனும் குற்றங்கள் மேற்கொள் ளப்பட்டிருக்குமாயின் அவை சரியான விசாரணைகளின் மூலம் கண்டறி யப்பட வேண்டும். யார் தவறிழைத்திருப் பினும் அதற்கான தண்டனையினை கொடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. எனினும் யுத்தக்குற்றங்கள் தொடர் பில் சர்வதேசம் தலையிடுவது ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றேயாகும்.

விடுதலைப்புலிகளுடனான யுத்தத தில் இராணுவம் செய்ததாக குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மட்டுமே அனைவரும் பேசுகின்றனர். பொய் யான ஆதாரங்களை தயாரித்து சர்வ தேச அமைப்புக்களிடம் முறையிட்டு வருகின்றனர்.

ஆயினும் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர் பில் ஏன் எவரும் வாய்திறக்கவில்லை. சர்வதேசம் கூட விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டுக் கொண்டிருக் கின்றது.

யுத்தத்தில் தமிழ் மக்களை கொன் றமைக்காக அரசாங்கத்தை தண்டிக்க கோருப வர்கள் விடுதலைப்புலிகள் செய்த குற்றததிற்காக யாரைத் தண்டிக்கப் போகின்றனர்? விடுதலைப்புலிகள் கட்டாயத் தின் பேரில் தமிழ் மக்களை பயங்கரவாத இயக்கத்தில் சேர்த்து ஆயுத மேந்த வைத்தமைக்கு யாரை தண்டிக் கப் போகின்றனர். (6)

## தரம் 5 மாணவர்கள் நடித்த நெருப்பாற்றின் நீச்சல் நாடகம் - 02

நாடகமேடையில் இரண்டு மாணவர்கள் தமக்குள் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டனர்.

மாணவன் (III) : நண்பர்களே! இங்கு இரகசியம் இருத்தல் ஆகாது. கூறப்பட்ட இரகசியம் என்ன என் பதை இங்கு கூறியாகவேண்டும்.

மாணவன் (II) : சக மாணவர்களே! அது வேறு ஒன்றுமில்லை. மாகாண மட்டப் பரீட்சையை குறை சொல்ல வேண்டாமாம் என்று சொல்கிறான். ஏனெனில் அவர்கள்தான் எங்களின் அவல நிலையை அறிந்து ஐந்தாறு வினாக்களை திறந்த வினாக்களாக ஆக்கித் தந்து எங்கள் புள்ளிக்கு பெருமை சேர்க்கின்றனர். எனவே மாகாண மட்டப் பரீட்சையை வரவேற்க வேண்டுமாம்.

இவ்வாறு ஒரு பகுதி மாணவர்கள் கலந்துரையாடும் போது ஏனைய மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, எங்களைக் கசக்கிப் பிழிந்து சக்கையாக்கி ஆண்டு ஆறுக்கு அனுப்புகின்ற பெற்றோரே! ஆசிரியரே! எங் களை கசக்கிப்பிழிந்து – மனங்களைச் சிதைத்து – மனிதங்களை அறுப்பதில் ஏன் இந்தப் புரியாத்தனம்?

கடந்த ஒன்பது நாட்களாக தொடர்ந்து புலமைப்பரி சில் பரீட்சை எழுதுகிறோம் எடுத்த புள்ளி குறைகிறதே தவிர ஏறவில்லை. அப்படியானால் கண்டபாட்டில் நடத்தப்படும் பரீட்சை எதற்கு... இவ்வாறு ஒருமித்து குரல் கொடுக்க, நெருபாற்றை நீந்துவோம்; நெரு பாற்றை நீந்துவோம் ஆண்டு ஆறில் விடுதலை காண்போம் அதன்பின்பு எங்களை எவரும் கவனிக்க மாட்டார்கள். எங்களுக்கு முழுச் சுதந்திரம் என்று பாடியவாறு மாணவர்கள் செல்ல திரை மூடிவிலகிறது.

மாணவன் (IV) : அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய கல்வி அதிகாரிகளே! புலமைப் பரிசில் பரீட்சை யில் நாங்கள் சித்தியடைந்தால் பிரபல்யமான பாட சாலைகளில் அனுமதி எடுப்பதற்காக ஏகப்பட்ட டொனே சன் கட்ட வேண்டும்.

அதேநேரம் பிரபல்யமான பாடசாலைகளில் அதி கூடிய பிரபல்யமான பாடசாலைகளும் எங்கள் மண் ணில் உண்டு. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந் தாலும் அந்தப்பாடசாலைகளுக்கு தனியான கட்டவுட் இப்படியாக எங்களை எத்தனை வகையாக வருத்தி எடுக்கிறீர்கள்?

மாணவன் (V) : புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளி பெற்றால் அந்தமாணவன் சித்தியடைய வில்லையா? ஒரு பின்தங்கிய பாடசாலையில் கற்ற ஓர் ஏழை மாணவன்; கற்றலுக்கான எந்தவசதியையும் வீட்டில் கொண்டிராதவன் நூறு புள்ளிகள் பெற்றால் அது சாதனை இல்லையா? புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட புள்ளிகளால் தீர் மானிக்கப்படுவதல்ல.

மாறாக எத்தனை மாணவர்களை தேர்ந்தெடுப்ப தென்று தீர்மானித்து அதற்கேற்றால் போல் கட்டவுட் புள்ளியை தீர்மானிக்கின்ற நடைமுறையே நம் நாட்டில் உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில்; புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், சித்தியடை யாத மாணவர்கள் என்று பாகுபடுத்தி அதற்கொரு புகைப்படக்காட்சி கொடுத்து எங்கள் மனங்களை கசக்கிப் பிழிக்கின்ற செயல் கண்டு அதனைத் தடுக்க விளையாதது ஏன்?

இவ்வாறு மாணவர்கள் ஆக்ரோசமாகக் கூற அனைத்து மாணவர்களும் சேர்ந்து

**யார் போய்ச் சொல்லுவார்**
**தரம் ஐந்து மாணவர்கள் படும்பாட்டை**
**அரனிடம் யார் போய்ச் சொல்லுவார் ...**

என்று மாணவர்கள் பாடியவாறு செல்ல, இதோ! தரம் ஐந்து மாணவர்கள் நடித்த நெருப்பாற்றின் நீச்சல் நாடகம் நிறைவுற்றது என்ற அறிவித்தலை ஒலி பெருக்கி தந்தது.

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந் துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெற வுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர் களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (6)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத் தினால் கடந்த 2012 ஆம் ஆண்டு நடத்தப் பட்ட கைதடி நுணாவில் பகுதியில் அமைத் துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தின் தையல், அழகுக் கலை, கணனி வன் மற் றும் மென்பொருள் ஆகிய பயிற்சிப் பரீட் சையில் தோற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.மடத்தடிப் பகுதியில் அமைந்துள்ள கலைச்சேரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

எனவே பங்கு பற்றிய மாணவர்கள் அ னைவரும் பங்குகொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-37)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுந்தரோடை அருள்மிகு வீரகத்தி விநா யகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்ப மாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெற வுள்ளது. (6)

## சுனாமி ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் உள்ள கரம்பன் மேற்கு ஜே/54 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று வியாழ்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத் திகைப் பயிற்சி செயற்பாடுகளும் தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வும் மேற்கொள் ளப்பட இருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித் துள் ளார்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமை தியாக இருக்குமாறும் இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்ப மடையத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## நல்லூர்க்கந்தனின் கொடிச்சீலை பவனி

நல்லூர் கந்தப் பெருமானின் கொடிச் சீலையானது இன்று வியாழக் கிழமை முற்பகல் 8.30 மணிக்கு திருநெல் வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்திய மூர்த்தியின் இல்லத்தலிருந்து சமய ஆராதனை களின் பின்னர் சிவஞான முதலியாரின் பரம்பரையில் வந்த தர்ம குலசிங்கத்தால் சட்டநாதர் வீதியில் அமைந் துள்ள வேல் முருகன் ஆலயத்திற்கு எடுத் துச் செல்லப்பட்டு பூசை வழிபாடுகளின் பின்னர் தேரில் பக்தர்களால் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் படவுள் ளது. (6)

## ஆளுநர் தலைமையில் சிரமதானம் இன்று.

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவி லுக்கு அண்மையில் விஜயம் செய்தி ருந்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திர சிறியிடம் கோயில் நிர்வாகிகள் பிரதம குருக்கள் கோபுரத்தை புனர் நிர்மாணம் செய்து தரும்படியும் கோயிலைச்சுற்றி சிரமதானம்செய்துதரும்படியும்விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவான இன்று வியாழக்கிழமை காலை ஆளுநர் தலை மையில் அவரது அலுவலக உத்தியோகத் தர்கள், ஊழியர்களையும் உள்ளடக்கி சிரமதா னம் மேற்கொள்ளப்படவுள்ளது.


இதேபோன்று கீரிமலை நகுலேஸ் வர ஆலயத்திலும் மிக விரைவில் சிரம தானம் இடம்பெறவுள்ளதுடன் அண் மையில் கோபுர வேலைக்காக ஆளுநர் நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய் ஆலயத்திற்கு வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (6)

## சத்திய தரிசனம்



### குழந்தைகள் போல இருங்கள்

- தாயை நாடும் குழந்தை போல மனம் எப்போதும் கடவுள் சிந்தனையிலேயே இருக்கட்டும்.
- உடல் மட்டும் சேவை செய்தால் போதாது. அதில் மனம் ஒன்றி ஈடுபடுவது அவசியம்.
- மனத்துாய்மை இல்லாத பஜனை, பூஜை இரண்டும் பலன் அளிப்பதில்லை.
- அதிகாலையிலேயே எழுந்து மனதில் நல்ல எண்ணத்தைப் பரவ விடுங்கள்.
- தர்மத்திற்கு சத்தியமே ஆதாரம். 'சத்தியமும், தர்மமுமே நமது உண்மையான நல்ல நண்பர்கள்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கர்ப்பிணிப் பெண்களுக்கு

சாதாரணமாக உள்ளவர்களைவிடக் கர்ப்பிணிப் பெண்களுக்கு இரட்டிப்பான சக்தி தேவைப்படுகிறது.

கர்ப்பிணிப்பெண்கள் டென்ஷனாக, எரிச்சலுடன் இருக்கக்கூடாது. உண்ணும் பொழுது நிதானமாகவும் மகிழ்வுடனும் உண்ணவேண்டும்.


சண்டைக்காட்சிகள், துக்கக் காட்சிகள், அச்சமூட்டும் காட்சிகள், திகில் காட்சிகள் உள்ள தொலைக்காட்சி, சினிமா ஆகியவற்றைப் பார்க்கக்கூடாது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு உடலுழைப்பு வேண்டும். சாப்பிட்டு விட்டு டனே படுத்துவிடக்கூடாது. இதனாற் பிரசவம் சிரமமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவற்கிரி எல்லாளனை வீழ்த்தியது அச்சுவேலி கதிரொளி




அமரர் சுப்பிரமணியம் தற்பரன் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

அதில் கதிரொளி விளையாட்டுக் கழகம் 31 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன் படி 15 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது.

அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி சார்பில் மதுஷாந் 67, துஷி 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் சார்பில் விதுஷன் மற்றும் திவா தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 191 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக அணி சார்பில் விதுஷன் 49, டிலக்ஷன் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக்கழக அணி சார்பில் டவாத் 3 விக்கெட்டுக்களையும் சாள்ஸ் மற்றும் ஜனக்ஷன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்படி இப் போட்டியில் அச்சுவேலி கதிரொளி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அமரர் சுப்பிரமணியம் தற்பரனின் 31 ஆவது நாள் நினைவையொட்டி நடத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் சம்பியனாகியது.

இதில் தொடர்நாயகன் விருதையும் அதிகூடிய ஓட்டத்தை பெற்றவருக்கான விருதையும் நவற்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழக வீரன் விதுசன் பெற்றுக்கொண்டார்.



இறுதியாட்டத்தின் ஆட்டநாயகனா கதிரொளி விளையாட்டுக் கழக வீரன் மதுசன் தெரிவு செய்யப்பட்டார். (கு-23)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

சில்லாலை புனித கதிரை அன்னை ஆலய பெருந் திருவிழாவையொட்டி ''ஹெட் லயன்ஸ்'' விளையாட்டுக் கழகம் அணிக்கு ஆறு ஓவர்கள் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பண்டத்தரிப்பு வை.எம்.சி.எ. இல் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 077 95 76 732 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

குப்பிளான் குறிஞ்சிக் குமரன் சிறுவர் கழகம் 16 வயதுக்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றும் அணிக்கு 9 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றினை அடுத்த மாதம் 4 ஆம் திகதியளவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

# இலங்கை அணியை புறக்கணித்த மலிங்க



இந்தியாவில் செப்டெம்பர் மாதம நடைபெறவிருக்கும் சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் லஷித் மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாட முடிவெடுத்துள்ளார்.

இலங்கை அணியான சதர்ன் எக்ஸ்பிரஸ் அணிக்கு விளையாடப் போவதில்லை என்று மலிங்க அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வாரியச் செயலர் நிஷந்த ரணதுங்கா இது பற்றிக் கூறுகையில்,

நாங்கள் சதர்ன் எக்ஸ்பிரஸ் அணிக்கு விளையாடுவதை விரும்பினோம் ஆனால் மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வாரியம் மற்றும் ஐ.பி.எல். சம்பியன்ஸ் லீக் இடையேயான ஒப்பந்தத்தின் படி வீரர்கள் தங்கள் விருப்பப்படி அணியைத் தெரிவு செய்து கொள்ளலாம். அதன் படி மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாட தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார் என்று கூறியுள்ளார்.

சதர்ன் எக்ஸ்பிரஸ் அணி இலங்கை உள்நாட்டு 20 ஓவர் கிரிக்கெட் தொடர் சம்பியன் அணியாகும். இதன் அணித்தலைவர் மலிங்கா என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## உதைபந்தாட்டம்

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னாகண்டல் வளர்மதிவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

# இளவாலை மத்தி வெற்றி


மட்டுவில்வளர்மதிசனசமூகநிலையத்தின்49ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ''பி'' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற ''பி'' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அ[illegible] மோதிக்கொண்டது.

4 செற்களைக் கொண்ட [illegible] யாட்டத்தில் இளவாலைமத்திய வி[illegible] யாட்டுக் கழக அணி 3:0 என்[illegible] செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

சிறந்த வீரனாக இளவாலை மத்திய விளையாட்டுக் கழக [illegible]ணி வீரன் ஜெகன் தெரிவானார். (கு)

# மற்றவர்களுக்கு இடமளிக்காத ஜமைக்கா நாட்டு பெண்கள்




கொமன்வெல்த் விளையாட்டில் நேற்றுமுன்தினம் நடந்த தடகளத்தில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா நாடு முதல் 3 இடங்களையும் பிடித்தது.

தங்கம் பதக்கத்தை மெக்பெர்சன் வென்றார். வெள்ளியை வில்லியம்ஸ் மில்சும், வெண்கலத்தை கிறிஸ்டினாடேவும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கென்யாவின் செப்கிர்யூ தங்கம் பதக்கத்தையும், கிப்லாகட் வெள்ளியையும், செபேட் வெணகலத்தையும் வென்றனர். (கு)



சில்லாலை தூய கதிரைமாதா முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை வண.நேசநாயகம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார். (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் மக்களுக்கு...

தேரரிடம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட போது, வண. சோபித தேரர் தலைமையிலான அதன் முதல் ஊடக மாநாட்டில் நானும் கலந்து கொண்டேன்.

என்னுடன் இன்றைய வடமேல் மாகாண முதல்வர் தயாசிறி ஜயசேகர ஐதேக சார்பாகவும், கூட்டமைப்பு சார்பாக நண்பர் சுமந்திரனும் கலநது கொண்டார்கள். அத்துடன் இடதுசாரி தலைவர்கள் விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிதுங்க ஜயசூரிய ஆகியோரும், சிவில் அமைப்புகளின பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

அப்போது அதிகார பகிர்வு பற்றியும் நாம் அந்த ஊடக மாநாட்டில் பேசினோம். உண்மையில் சிங்களத்தில் சாதாரண சமாஜ சந்தஹாவு ஜாதிக வியாபாரய என்ற பெயரை தமிழ் மொழியில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்று மொழி பெயர்ததே நான்தான்.

ஆனால், இன்று இந்த இயக்கத்தன் நிகழ்ச்சி நிரலில் அதிகார பகிர்வு என்ற விடயம் இல்லை. இது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்புடையதில்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்று நாடு முழுக்க வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் நீதியாக சிந்திக்கும் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்றால், உங்கள் குறைந்தபட்ச நிகழ்ச்சி நிரலில், 13-ம் திருத்தத்திற்கும் இடமிருக்கவேண்டும்.

13-ம் திருத்தம் தேசிய இனப்பிரச்சினையை முழுமையாக தீர்க்க போவதில்லை. ஆனால், அது ஒரு குறைந்தபட்ச ஆரம்ப புள்ளி. அதை விடவும் இனி ஒரு போதும் கீழே இறங்க முடியாது. இந்நாட்டின் ஜனாதிபதி 13ஐ அமுல் செய்து, 13 பிளஸ் பற்றி பேச்சுவார்த்தை நடத்த போவதாக ஐநா செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் உத்தரவாதம் அளிதுள்ளார். இந்நிலையில் 13ஐ சோபித தேரரின் இயக்கம் மறந்ததையிட்டு தமிழ் பேசும் மக்கள் அதிருப்தியடைநதுள்ளார்கள்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற சமூக நீதிக்கான தேசிய இயக்க மாநாட்டுக்கு வருகை தரும்படி சோபித தேரர் என்னையும் அழைத்திருந்தார். அந்த அழைப்பிற்கு நன்றி. அச்சமயம் நான் நாட்டில் இருக்கவில்லை. நேற்றுமுன்தினம்தான் நாடு திரும்பனேன். சோபித தேரர் எனது நணபர். அவருடன் எனக்கு நெருங்கிய பரிச்சயம உள்ளது. அவரை நான் மதிக்கிறேன். ஆனால், நமது மக்கள் பற்றியும் கலந்து பேசாத இயக்கத்தில் நாம் இணைந்து கொள்வதில் சிக்கல் இருக்கிறது. இதை வண. தேரின் கவனத்துக்கு பகிரங்கமாக இந்த செய்தியாளர்கள் மூலம் சிங்கள, தமிழ் மொழிகளில் கொண்டு வருகிறேன். இது என் கடமை.

சோபித தேரரின் அந்த கூட்டத்தல் கூட்டமைப்பு தலைவர் கலந்து கொண்டதை பற்றி இங்கே செய்தியாளர் என்னிடம் கேள்வி எழுப்பினார். கலந்துகொண்டதில் என்ன தவறு இருக்க முடியும்? கூட்டமைப்பின் நிலைப்பாடும், எங்கள் நிலைப்பாடா கத்தான் இருக்கும் என நான் நம்புகிறேன்.

எனினும் இதுபற்றி நீங்கள் கூட்டமைப்பிடம்தான் கேட்க வேண்டும. அதிகாரப்பகிர்வு, 13-ம் திருத்தம் ஆகியவற்றை தீண்டத்தகாத விடயங்களாக கருதி செயல்படும் ஒரு கூட்டம் இங்கு உள்ளது. அது ஆளும் கூட்டணியிலும், எதிரணியிலும் உள்ளது.

இதன் இணைத்தலைவர்கள் வமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் ஆகும் இன்று விமல் ஊவா தேர்தலில் தனித்து போட்டியிட போகிறார். இது நல்ல முடிவு. அவரை நான் வாழ்த்துகிறேன். ஹெல உறுமயவும இப்படி தனித்து போட்டியிட வேண்டும் என கோருகிறேன்.

சிறு கூட்டங்களான இவர்கள், கூட்டணியில் போட்டியிட்டு தங்கள் சொந்த கருத்துகளை பொது கருத்தாக காட்ட முயல்கிறார்கள். ஆகவே தனித்து சென்று, சிங்கள மக்கள் மத்தியிலே உங்கள் செல்வாக்கை காட்டுங்கள்.

இங்கே மேல்மாகாணசபை தேர்தலில் தனித்து போட்டியிட்டு ஐம்பத்தோராயிரம் வாக்குகளை சொந்தமாக பெற்று என் மக்கள் செல்வாக்கை நான் காட்டியுள்ளேன். முடிந்தால் நீங்களும் ஊவாவில் சிங்கள மக்களிடம் வாக்கு வாங்கிகாட்டுங்கள். அதன்பிறகு அதிகார பகிர்வை எதிர்த்து நீங்கள் பேசலாம்.

அதை செய்யாமல் 13ஐ யும் எதிர்த்து கொண்டு, மாகாண சபையையும் எதிர்த்து கொண்டு, மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு, பதவிகளை பெற்று, நீங்கள் கோமாளி அரசியல் செய்கிறீர்கள். இங்கே மேல்மாகாணசபையில் அமைச்சராகவும் பதவி வகித்து கொண்டு ஹெல உறுமயவின் உதய கம்மன்பில உச்சகட்ட கோமாளி அரசியல் செய்கிறார்.

நாங்கள் கோமாளி அரசியல் செய்யவில்லை. இந்த நாட்டை பிரித்து தனி நாட்டை உருவாக்க விரும்பிய புலிகள் அதிகாரப்பூர்வமாக பாராளுமன்றம் வரமுடியாது. அதுபோல் அதிகார பகிர்வை ஏற்றுக்கொள்ளாத நீங்கள் அதிகாரப்பூர்வமாக மாகாணசபைக்கு வர முடியாது. புலிகள் வரவில்லையே. நீங்கள் மட்டும் ஏன் வருகிறீர்கள்?

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (செ-11)

# ஊடக வன்...

இயக்கம் உள்ளிட்ட பிரதான ஐந்து ஊடக கட்டமைப்புக்களுடன் வடக்கிலுள்ள ஊடக அமைப்புக்களும் இப போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிதது களத்தினில் குதிக்கவுள்ளன.

தெற்கு ஊடக அமைப்புக்களுடன் வடக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து ஊடக அமைப்புக்களும் கைகோர்த்து முன்னெடுக்கும் இவ்வார்ப்பாட்டத்திற்கு அனைத்து தரப்பினதும் ஆதரவினை வேண்டி நிற்பதாக ஊடக அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன. (செ-4)

# அமெரிக்க அறிக்கை...

தேரர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

இலங்கையில் அமெரிக்காவின கைபொம்மையாக ஆட்டுவிக்கக் கூடிய அரசியல் பொம்மைகளை உருவாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இங்கு மதங்களிடையே நல்லிணக்கம் இல்லையென்றும் இனங்களிடையே ஒற்றுமை இல்லையென்றும குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அதற்காக நாட்டுக்குள்ளேயே கைக்கூலிகள் அமர்த்தப்பட்டனர். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில்லையென்றும் ஜனநாயகம் வாக்குரிமை பாதுகாக்கப்படுவ தில்லையென்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதோடு அவற்றை நிவர்த்தி செய்வதெனக் கூறிக் கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பணத்தை அமெரிக்காவின் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக வழங்கி குழப்பங்களை நாட்டுக்குள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், பொதுபலசேனா விழிப்பாக இருந்து இவ்வாறான திட்டங்களை தடுத்து நிறுத்தியது. இந்த கோபாவேசமே எமக்கெதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதைவிடுத்து எமக்கெதிராக நியாயமான முறையில் எந்த வொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை.

இலங்கையில் அடிப்படைவாத கிறிஸ்தவ அமைப்புக்களுக்கு பணம் கொடுத்து மதமாற்றங்களை அமெரிக்காவே முன்னெடுக்கின்றது.

அத்தோடு இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாதமும் அடிப்படைவாதமும் செயற்படுவதாக இந்திய உளவுப்பிரிவினர் தகவல்களை வெளியிட்டனர்.

இது தொடர்பில் அமெரிக்காவின கவனம் எங்கே போனது? எந்த அறிக்கையை வெளியிட்டார்கள்? எதனையும் செய்யவில்லை. அரசாங்கத்திற்குள்ளிருக்கும் முஸ்லிம் அடிப்படைவாத சக்திகளும் அமெரிக்காவுக்கு துணை போகின்றன.

எவர் தடுத்தாலும் அமெரிக்கா எந்த அறிக்கைகளை வெளியிட்டாலும் பௌத்தத்தையும் நாட்டையும் பாதுகாக்கும் எமது வேலைத்திட்டம் தொடரும் என்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (எ-11)

# கலிஸ் ஓய்வு

தென்னாபிரிக்க வீரர் கலிஸ் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார். தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை ஆட்டக்காரராக இருந்தவர் ஜக் கலிஸ.

கடந்த வருடம் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற இவர் ஒருநாள் மற்றும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில விளையாடி வந்தார்.

இந் நிலையில் இவர் சர்வதேச கிரிக்கெட் (டெஸ்ட், ஒருநாள், 20 ஓவர்) போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதாக அறிவித்துள்ளார். (க)




# 18 வயதுக்குட்பட்ட பிள்ளை...

பாடசாலை சென்று வருகின்றனரா?, அவர்கள் அன்றைய தினம் பாடசாலையில் என்ன கற்றார்கள்? என்பது தொடர்பிலும் பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பிள்ளைகள்பாடசாலைக்குச்செலுலும் வீதியில் பற்றைக்காடுகள் அல்லது பாழடைந்த வீடுகள் இருக்குமாயின் அவர்களுடன் பெற்றோர்களும் உடன் செல்வது நல்லது. வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள், பாடசாலை விட்ட பின்னர் தங்கள் பிள்ளைகள் வீட்டில் பாதுகாப்பாக இருக்கக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

அத்துடன், அறியாதவர்களிடமிருந்து உணவுகளை வாங்கி உண்பதையும், அவர்களுடன் பயணிப்பதையும் பிள்ளைகள் தவிர்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பெற்றோர் முன்னெடுக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை தங்களின் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுகள், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பிலான விடயங்கள் பற்றி மாணவர்களுக்கும் பெற்றோர்களுககும் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் வேளையில் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களிற்கு அறிவக்கும்படியும் வலியுறுத்தப்பட்டது. (செ-1

## 45-ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்



அமரர் நாகேஸ்வரன்
மங்கையற்கரசி

அன்புடையீர்!

கடந்த 17.06.2014 (செவ்வாய்க்கிழமை) அ
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி
நாகேஸ்வரன் மங்கையற்கரசி அவர்களின்
சாந்திப் பிரார்த்தனை இன்று (31.07
வியாழக்கிழமை மதியம் 12 மணி
எமது இல்லத்தில் நடைபெறவுள்
அத்தருணம் தாங்களும் வருகை
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய
நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்
அன்புடன் அழைக்கி

நாகம்மாள் வீதி, உடுவில். (7181)

தக
குடும்பத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி கந்தசாமி பவானி



பளை வண்ணாங்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி கந்தசாமி பவானி 29.07.2014 செவ்வாய்க்கிழமை இரவு 12.00 மணிக்கு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-சரஸ்வதி (பவளம்) தம்பதியினரின் அன்பு மகளும் சுதாகரன் (பளை), இளந்திரையன் (பளை), அகிலன் (கனடா), நளினி (லண்டன்), நந்தகுமார் (சுவிஸ்), பகீரதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தினி (பளை), சுதாயினி (பளை), கஜேந்திரன் (லண்டன்), பாமதி (சுவிஸ்), தேனுகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீஸ், சஞ்சனா ஆகியோரின் பெரியம்மாவும் தர்மிலி, கஸ்மீரா, தாறோஜிதன், பிரவிஷன், சங்கவி, றிந்தியா, விதுணன், ஷயனி, கிஷானி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (30.07.2014) புதன்கிழமை பளையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மலையான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

A9 வீதி, வண்ணாங்கேணி, பளை.
021 2050006

தகவல்: குடும்பத்தினர்

(7175)

## ஒலிபெருக்கி...

இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

திங்கள்முதல்வியாழன்வரை இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 6 மணிவரைக்கும், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரவு ஒரு மணியில் இருந்து அதிகாலை 6 மணி வரைக்கும், ஞாயிற்றுக்கிழமையில் இரவு 12.30 மணியில் இருந்து அதிகாலை 6 மணி வரைக்கும் ஒலிபெருக்கிகளை பாவிப்பது ஆகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்துக்கும் அதிகமாக நிகழ்ச்சிகள் நீடிக்குமாயின் ஒலிப்பெட்டிகளை மட்டுமே பயன்படுத்த முடியும் எனவும் ஆலய வீதிகள் மற்றும் விழா மைதானங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் விளம்பர வாகனங்களுக்கு மூன்று மாதகால அவகாசம் கொடுத்து உரத்து அலறும் சினிமாப் பாடல்களுக்குப் பதிலாக் மெல்லிசையை ஒலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் மேற்படி விடயம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் ஒலிபெருக்கி பாவனைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது அவசியம் என இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## காணாமல்...

திருகோணமலையிலுள்ள உறவினர் வீடொன்றிற்குச் சென்று திரும்பி வரும்போது நேற்றுமுன்தினம் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து சிறுவன் காணாமல் போயுள்ளான். இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று இளைஞன் ஒருவரால் குறித்த சிறுவன் யாழ்ப்பாணம் பொலிஸ நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளான். யாழ்ப்பாணம் பொலிஸார் சிறுவனின் பெற்றோரை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-11)

## கச்சதீவு...

இலங்கை கடற்படையினர் கைது செய்த 92 மீனவர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 26 ஆம் திகதி 51 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் 7 படகுகள் கைப்பற்றப்பட்டன.

இந்த மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என கோரி தமிழக மீனவர்கள் கடந்த 5 நாட்களாக தொழில் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

நாளை முதலாம் திகதிக்கு முன்னர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது போனால், படகுகளில் வெள்ளைக்கொடியுடன் சென்று கச்சதீவில் குடியேறப் போவதாக மீனவர்கள் அறிவித்துள்ளனர். (செ-11)

## பேரறிவாளனின்...

இருந்த காங்கிரஸ் அரசு பழிவாங்கும் நோக்கில் எதிர்ப்பு தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து விடுதலையை தடுத்தது.

தற்போது இந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் 5 பேர் கொண்ட அரசியல் சாசன அம[…]வுக்கு மாற்றப்பட்டுள்ளது. மூன்று முறை[…] குஜராத் முதல்வராக இருந்த பிரதமர் மோ[…]க்கு மாநிலத்தின் அதிகாரம் பற்றி தெரியு[…] அவர் எனது மகனின் விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல், விடுதலையில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை உறுதி செய்வார் என எதிர்பார்க்கிறேன் என அற்புதம்மாள் தெரிவித்தார். (செ-11)

**SPOKEN ENGLISH**
புதிய பிரிவு ஆரம்பம்
02.08.2014 காலை 9.30
இப்பாடநெறியானது சனி/ஞாயிறு தினங்களில் காலை 9.30 - 12.00 வரை நடைபெறும்
ஆங்கிலம் பேச ஓர் அரிய வாய்ப்பு
A1/B1/B2/IELTS
E-CITY COLLEGE OF ENGLISH
372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
0212217106/0773400418
(C-8061)

# ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோவில் பூங்காவன உற்சவம் - 2014
## (31.07.2014 வியாழக்கிழமை)

காலை 8.00 மணியளவில் அபிஷேகம், பூசைகள் நடைபெற்று, மாலை 6.00 மணியளவில் திருக்கல்யாண நிகழ்வுடன் வெகு விமர்சையாக பூங்காவன உற்சவம் நடைபெறும்.



மாலை நிகழ்ச்சிகள்
◎ 6.00 மணி – 7.00 மணி
வீணைக்கச்சேரியும் நாட்டியாஞ்சலியும்
லண்டன் பவானந்தத்தின் புதல்வி
செல்வி கிசோனா

◎ 7.00 மணி – 8.30 மணி ◎ சைக்ஸ்ச போண் வித்துவான் மங்களூர் P.K.கணேஷ், P.K.தாமோதர், ஜெயராம், சிவராஜ் ஆகியோரின் சைக்ஸ்ச போண் கச்சேரி இடம்பெறும். ◎ 8.30 மணி – 12.30 மணி
இந்திய, இலங்கை நாதஸ்வர தவில் கச்சேரி.

நாதஸ்வரம்
இந்தியா: மாம்பழம் சிவா, வெங்கடேசன்
இலங்கை: P.S.பாலமுருகன், K.P.குமரன்

தவில்



இந்தியா: திருவாளப்புத்தூர் தவில்சக்கரவர்த்தி T.A.கலியமூர்த்தி, மன்னார்குடி M.R.வாசுதேவன், கோவிலூர் K.G.கல்யாணசுந்தரம், V.M.கணேஷ், M.அசோக்குமார்
இலங்கை: T.உதயசங்கர், N.R.S.சுதாகரன், B.நர்மதன், P.S.செந்தில்

…00 மணி – 4.00 மணி ◎ இன்னிசை விருந்து
பத்மஸ்ரீ.சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வன் டாக்டர்.கோ.சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

அனைவரையும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

…ன் தேவஸ்தானம்,
ஆவரங்கால்.

(7170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

… வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை … முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.